# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## வழிநடத்தும் கர்த்தர்

"நீ நடக்கவேண்டிய
வழியிலே
உன்னை நடத்துகிற
உன் தேவனாகிய
கர்த்தர் நானே" ஏசாயா 48:17

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

September - October 2019
Volume : 59

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 5

## மதுரை AG CAMP SITE அலங்கம் கட்டும் பணி துவக்கம்



## போதகர்கள் துணைவியர் முகாம்– கன்னியாகுமரி





## இஸ்லாமிய ஊழிய சிறப்பு கருத்தரங்கு – மதுரை





## சாத்தூர் மண்டல ஆண்கள் முகாம்





## சாத்தூர் மண்டல பெண்கள் முகாம்







ஆசிரியரிடமிருந்து........!

# வழிநடத்தும் கர்த்தர்

"உன்னை வழிநடத்துகிற
உன் தேவனாகிய கர்த்தர் நானே"
ஏசாயா 48:17

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் நம்மை வழிநடத்தும் நல்ல மேய்ப்பராகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நம்முடைய கர்த்தர் நம்மை வழிநடத்துகிற கர்த்தர். வேதம் முழுவதும் தேவன் எப்படி தேவ மனிதர்களையும், தேவ ஜனங்களையும் வழிநடத்தினார் என்பதை வாசிக்க முடியும். இந்த செய்தியில், நம்முடைய வாழ்க்கையில் தேவ வழிநடத்துதலின் அவசியம் குறித்தும், தேவன் எவ்விதம் நம்மை வழிநடத்துகிறார் என்பது குறித்தும் சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவ வழிநடத்துதலின் அவசியம்
## The MUST of God's Guidance

வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் (குடும்ப சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, ஊழிய சூழ்நிலை) நாம் தடுமாறும்போது, வழி தெரியாமல், செய்வது இன்னதென்று அறியாமல் கவலைப்படுகிறோம். ஆகவேதான் தீர்க்கதரிசி, 'மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்' என்று கூறுகிறார் (எரே.10:23). இத்தகைய தடுமாற்றம் நிறைந்த வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிகவும்அவசியம். இல்லையேல் நாம் வழிதப்பி, தேவத் திட்டத்தை விட்டு விலகி சென்றுவிடுவோம் (ஏசாயா 53:6). நம்முடைய கர்த்தர் நல்ல மேய்ப்பனாக நம்மை வழிநடத்துகிறவராய் இருக்கிறார் (சங்.23:3). தாவீதைப் போல, "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" (சங்.27:11) என்று நாமும் ஜெபிப்போமானால் கர்த்தர் நம்மையும் நடத்துவார்.

## 2. தேவ வழிநடத்துதலின் விதம்
## The MANNER of God's Guidance

**நித்தமும் நடத்துவார்:**

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்" (ஏசாயா 58:11).

நம்முடைய கர்த்தர் நம்மை வாழ்நாள் முழுவதும் வழிநடத்த வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நித்தமும், தினமும் நடத்துவார் (ஏசாயா 58:11). இஸ்ரவேல் ஜனங்களை 40 ஆண்டுகள் இரவும் பகலும் அவர்கள் முன் சென்று வழிநடத்தினார் என்று வேதம் கூறுகிறது (சங்.78:14; நெகே.9:12;19;யாத்.13:21). அவர்கள் தேவைகள் அனைத்தும் சந்தித்து அவர்களை நடத்தினார் (ஏசாயா 48:21). இந்த தேவன் சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார் என்று சங்கீதக்காரன்

கூறுகிறார் (சங்.48:14). ஆம் பிரியமானவர்களே, தேவன் ஒவ்வொரு நாளும் உங்கள் தேவைகளை சந்தித்து, வறட்சி வந்தாலும் உங்களை நடத்தி உங்களை திருப்தியாக்குவார். நீங்கள் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல இருப்பீர்கள்!

**நேர்வழியில் நடத்துவார்:**

“என்னை நேர்வழியாய் நடத்தி வந்த தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்” (ஆதி. 24:48).

ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் தேடுவதற்காக தன்னுடைய ஊழியக்காரன் எலியேசரை அனுப்பியபோது ஆண்டவர் அவரை நேர்வழியாய் நடத்தி, ரெபெக்காளை தெரிந்தெடுக்க கிருபை செய்தார். ஆபிரகாமின் மனவிருப்பங்களையும் நிறைவேற்றினார். எலியேசரின் ஜெபத்தையும் கேட்டு ஆச்சரியமாய் காரியங்களை வாய்க்கப்பண்ணினார் (ஆதி.24:12,48,56). நாமும் நமக்காகவும் நம் பிள்ளைகளுக் காகவும் தேவ வழிநடத்துதலை கேட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் நிச்சயம் நம்மையும் நேர்வழியாய் நடத்தி, காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

**நித்திய வழியில் நடத்துவார்:**

‘நித்திய வழியிலே என்னை நடத்தும்’ (சங்.139:24). ‘நீதியின் பாதைகளில் என்னை நடத்துகிறார்’ (சங். 23:3).

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் என்று வேதம் கூறுகிறது (நீதி.14:12; 16:25). தேவ வழிநடத்துதலை நாடாமல் நம்முடைய சுய வழியில் சென்றால் முடிவு விபரீதமாக இருக்கும். ஆகவே நாம் நம்முடைய சுயபுத்தியின்மேல் சாயாமல், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து அவருடைய வழிநடத்துதலை நாடுவோம். அவர் நம்மை செவ்வையான வழியில், சத்தியத்தின் வழியில், நித்திய வழியில் பத்திரமாய் நடத்துவார் என்று வேதம் கூறுகிறது (வாசியுங்கள் நீதி. 3:5,6; சங். 25:5; 78:53; 107:7).

## 3. தேவ வழிநடத்துதலின் முறைகள்
## The METHODS of God's Guidance

தேவன் தம்முடைய ஜனங்களை பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வழிநடத்துகிறார். அவைகளை சுருக்கமாக கீழே விளக்க விரும்புகிறேன்.

**1. கர்த்தருடைய வார்த்தை:**

தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார். கர்த்தருடைய வசனமே நம்முடைய கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105). வேதம்தான் இந்த பூமிக்குரிய நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நமக்கு வழிகாட்டியாகவும், திசை காட்டியாகவும் இருக்கிறது. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களோடு பேசி வழிநடத்துவார் (ஏசாயா 30:21). ஆகவே அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசித்து, தேவனுடைய சத்தத்தை கேட்க பழகுவோம்! என் ஆடுகள் என் சத்தத்தை அறிந்திருக்கிறது, செவிகொடுக்கிறது, எனக்குப் பின்செல்லுகிறது என்று இயேசு கூறினார் (யோவான் 10:3, 4,27).

**2. பரிசுத்த ஆவியானவர்:**

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நம்மை வழிநடத்துகிறார். ‘உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக’ என்று தாவீது ஜெபிக்கிறார் (சங்.143:10). இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் தம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டு அவர்களை நடத்தி வந்தார் (நெகே.9:19,20). சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று இயேசு கூறினார் (யோவான் 16:13;14:26). பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் பாதையிலே அப்போஸ்தலர்களை வழி நடத்தினார் (அப்.10:19,20; 3:2;16:7). சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவிச் செய்தார் (அப். 15:29). நமக்கும் அப்படியே செய்வார்!

ஆவியானவர் ஒருபோதும் வசனத்திற்கு மாறாக வழிநடத்தமாட்டார். சிலர் இன்று ஆவியானவர் பேசினார் என்று கூறி தெளிவான வேத ஆலோசனைகளுக்கு விரோதமாக செயல்படுகின்றனர். இது தவறானது, ஆபத்தானது. மேலும் சொப்பனத்தின் மூலமோ, தீர்க்கதரிசனத்தின் மூலமோ உங்களிடம் யாராகிலும் பேசினால், வேத வசனத்திற்கு ஒத்திருக்கிறதா? என்று சோதித்துப்பார்க்க வேண்டும் (1 யோவான்4:1). இல்லாவிடில், தவறாக நடத்தப்பட அதிக வாய்ப்புகள் உண்டு. கவனம்!.

**3. பரிசுத்தவான்களின் ஆலோசனை:**

பரிசுத்தவான்களின் ஞானமுள்ள ஆலோசனைகளைக் கொண்டும் தேவன் நம்மை வழி நடத்துகிறார். ஆலோசனையில்லாத இடங்களில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் (நீதி.11:14). ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் (நீதி.12:15). ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்தில் ஞானமுண்டு (நீதி. 13:10). ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் எண்ணங்கள் உறுதிப்படும் (நீதி. 15:22; 20:18). ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி.24:6) என்றெல்லாம் வேதம் நமக்கு கூறுகிறது. ஆகவே ஒரு காரியத்தை செய்வதற்கு (வேத வசன வெளிச்சத்தோடுக்கூட) பெற்றோர்கள், ஆவிக்குரிய அனுபவமுள்ள போதகர்கள், மூத்த தேவப்பிள்ளைகளின் ஆலோசனைகளை கேட்பது வாழ்க்கையில் சரியான வழிநடத்துதலை பெறவும், நல்ல முடிவுகளை எடுக்க மிகவும் உதவிடும். ஜனங்களை பாரமின்றி நியாயம் விசாரித்து வழிநடத்த எத்திரோவின் ஆலோசனை மோசேவுக்கு மிகவும் உதவியாயிருந்தது (யாத்.18:14-20). நாத்தானின் ஆலோசனை தாவீதுக்கு சரியான நேரத்தில் கிடைத்தபடியால் சாலொமோனை தனக்கு பின் சிங்காசனத்தின் மேல் அமர்த்த முடிந்தது (1 இராஜா. 1:11-12).

**4. சூழ்நிலைகள்:**

தேவன் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளைக் கொண்டும் சில சமயங்களில் நம்மை வழிநடத்துகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவின் சில பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்ய தீர்மானித்திருக்கும்போது, தேவன் அங்கு செல்வதற்கான வாசல்களை அடைத்தார் (அப்.16:6-7). பவுலைக் கொண்டு ஐரோப்பா கண்டத்திற்கு சுவிசேஷம் செல்ல வேண்டும், சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் திட்டம் வைத்திருந்தார் (அப்.16:9-40). தேவன் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு சில வாசல்களை அடைக்கிறார். சில வாசல்களை திறக்கிறார் (1கொரி. 16:9)!

மேலும் சில நேரங்களில் நாம் கடினப்பட்டு தவறான வழியில் செல்லும்போது, சூழ்நிலைகள் மூலம் நம்மோடு பேசி சரிப்படுத்துகிறார். பிலேயாமை கழுதையைக் கொண்டு எச்சரித்தது இதற்கு உதாரணமாக இருக்கிறது (எண். 22:25-32).

ஆம், பிரியமானவர்களே, நம்முடைய தேவன் நம்மை இந்த வாழ்க்கைப் பயணத்தில் அற்புதமாக வழிநடத்த ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் உங்கள் வழியை அவருக்கு ஒப்புவித்து, **'கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையில் என்னை நடத்தும்'** (சங்.37:5; 27:11) என்று தினமும் ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் நித்தமும் நடத்துவார்! நீங்கள் உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் (யோவேல் 2: 26)! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்களே சபை அங்கத்தினர்களாயிருந்தனர்

தொடர்ச்சி

### ஞானஸ்நானத்தின் பொருள் என்ன?

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தின் பாவத்திற்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார். இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டவர் இந்த உலகத்தின் பாவத்திற்கு மரித்தவராகவும், இனி இயேசுவுக்காக உயிர் வாழ்பவராகவும் காண்பிக்கும் ஓர் வெளிப்படையான அடையாளமே ஞானஸ்நானம்.

**ஞானஸ்நானம் என்பது....**

1. **உலகத்தின் பாவத்திற்காக மரித்தவன் என்பதற்கு அடையாளம்**
   கிறிஸ்து இயேசுவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6:3).
2. **உலகத்தின் பாவத்திற்கு அடக்கம் பண்ணப்பட்டவன்**
   மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:4).
3. **கிறிஸ்துவோடு கூட உயிரோடு எழும்பினதற்கு அடையாளம்**
   ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசித்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).

### ஏன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?

1. **இயேசுவின் கட்டளை : அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்** (மத். 28:19).
2. **அப்போஸ்தலர் கட்டளை** : ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப். 2:38).
3. **இரட்சிப்போடு இணைந்தது** : விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16).
4. **தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படியாவிட்டால் கேடு உண்டாகும்** : பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் (லூக்கா 7:30).

5. **தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை** : அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1பேதுரு 3:21).

## தண்ணீரை தெளிப்பதா? தண்ணீரில் மூழ்குவதா? எது சரி?

1. **பேப்டிஸ்மா என்ற வார்த்தையின் பொருள் தண்ணீரில் மூழ்குதல்**

   புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் "பேப்டிஸ்மா" என்று வருகிறது. இதன் பொருள் "தண்ணீரில் அமிழ்த்துதல்", "மூழ்குதல்" என்று பொருள். ஸ்நானம் என்ற வார்த்தையின் பொருளும் இதுதானே. எனவே தண்ணீரில் மூழ்கிக் கொடுப்பதே சரியானது.

2. **தண்ணீர் அதிகமாயிருந்த இடத்திலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது**

   யோவான் ஸ்நானன் யோர்தான் நதி ஓடின சாலிம் ஊருக்கு அருகிலிருந்த அயினோன் என்ற இடத்தில் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். ஏனெனில் அந்த இடத்தில் தண்ணீர் அதிகமாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது (யோவான் 3:23). தெளித்து கொடுப்பதற்கு ஆற்றில் ஆழமான இடத்தைத் தேட வேண்டியதில்லை. தண்ணீரில் மூழ்கித்தான் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

3. **இயேசு ஞானஸ்நானம் பெற்று ஆற்றுத் தண்ணீரிலிருந்து கரையேறினார்** (மத்.3:16).

   யோர்தான் ஆற்றில் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஞானஸ்நானம் பெற்றபின் தண்ணீரிலிருந்து கரையேறினார். தெளிப்பதற்கு தண்ணீருக்குள் இறங்க வேண்டியதில்லை. தண்ணீரிலிருந்து ஏற வேண்டியதில்லை.

4. **ஞானஸ்நானத்திற்காக எத்தியோப்பியா மந்திரி தண்ணீரில் இறங்கினார்** (அப்.8:38)

   மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்க பிலிப்பும், மந்திரியும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்த பின்பு மந்திரி தண்ணீரிலிருந்து கரையேறினார்.

## தெளிப்பு ஞானஸ்நானம் சபைக்குள் எப்படி நுழைந்தது?

வேதாகமக் காலத்திலும், பிந்திய நாட்களிலும் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவது நடைபெற்று வந்தது. கீழ்க்காணும் சில காரணங்களால் தெளிப்பு ஞானஸ்நானம் பழக்கத்தில் வந்தது.

1. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் சிறுவயதிலே மரித்தபோது ஞானஸ்நானம் பெறாமல் பிள்ளைகள் மரித்தால் பரலோகம் போக மாட்டார்களே என்ற தவறான காரணத்தால் தெளிப்பு ஞானஸ்நானம் வந்தது.
2. வியாதியஸ்தர் ஞானஸ்நானம் பெற முன்வந்தபோது அவர்களுக்கு தெளித்து கொடுப்பது எளிதாக இருந்தது.
3. தண்ணீரில்லாத வனாந்தரங்களிலே ஞானஸ்நானம் கொடுக்க தெளிப்பு முறை வந்தது.
4. இது ஆவிக்குரிய ஓர் அடையாளம் தானே! தெளித்து கொடுப்பதால் தவறில்லை என்ற கருத்து உருவாயிற்று.

பிலிப்பு பட்டண சிறைச்சாலை அதிகாரியும் அவன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அந்த வீட்டிலிருந்த சிறு பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றிருப்பார்களோ? (அப்.16:33).

**பதில் :** பவுலும் அவன் உடன் ஊழியரும் முதலாவது சிறைச்சாலை அதிகாரியின் வீட்டிலிருந்த அனைவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. வசனத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். ஆனால் இந்த வசனத்தை ஆதாரத்தை காட்டி குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று யூகிக்க முடியாது.

தேர்தலிலே எங்கள் வீட்டிலுள்ள யாவரும் ஓட்டுச்சாவடிக்குச் சென்று ஓட்டுப்போட்டோம் என்றால் என்ன அர்த்தம்? வீட்டிலிருந்த குழந்தைகளும் ஓட்டுப்போட்டார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியுமா?

## இன்று :

சிறு குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. பிற மதத்தைச் சேர்ந்த மணமகன் அல்லது மணமகள் கிறிஸ்தவ குடும்பத்தில் சம்பந்தம் பண்ண வரும்போது திருமணத்திற்காக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்து தரும் பாவமன்னிப்பைப் பெறுவதில்லை. ஞானஸ்நானம் வெறும் சடங்காச்சாரமாய் நடைபெறுகிறது.

ஞானஸ்நானம் ஒருவனையும் கிறிஸ்தவனாக மாற்றுவதில்லை. மனந்திரும்பாத ஒருவருக்கு தெளித்துக் கொடுத்தாலும், மூழ்கிக் கொடுத்தாலும் பயனேதுமில்லை.

ஏற்கனவே இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றவர்களுக்கு முழுகிக் கொடுக்கும் ஞானஸ்நானமே வேதத்தின்படி சரியானது.

- தொடரும்

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# உயிர்மீட்சியே நமது தேவை

பாகம் : 7

**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

தண்ணீரில் நீச்சல் அடித்துக்கொண்டு இருந்த ஒருவன், திடீரென நீரில் மூழ்கி சலனமற்ற நிலையில் கிடந்தான். அவனை காப்பாற்றியவர்கள், கரையில் கொண்டு வந்து. அவனது உடலிலுள்ள நீரை அகற்றி முதலுதவி செய்கின்றனர். பின்னர் அவன் முன்பு இருந்தது போல செயல்பட ஆரம்பிக்கின்றான். உயிர்மீட்சிக்கு இது ஒரு உதாரணம். எழுப்புதல் அல்லது உயிர்மீட்சி அடைந்தவர்கள் ஜெபவாழ்க்கையில் ஒரு நிலையான தன்மை காணப்படும். வேத வசனத்தை வாசித்து தியானிப்பதில் ஒரு ஒழுங்கு காணப்படும். குடும்பத்தோடும், உறவினர்களோடும், சபையாரோடும் ஒரு நல்ல ஐக்கியம் காணப்படும். ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற்றம் தொடர்ந்து காணப்படும். பிறருக்கு வாழ்க்கையின் மூலம், வார்த்தையின் மூலம் சாட்சி பகருகின்ற தன்மை காணப்படும். இவைகள் மாத்திரம் அல்ல. ஒரு முன் மாதிரியான வாழ்க்கை. எண்ணத்தில், பார்வையில், வார்த்தைகளில், செய்கைகளில், பண விஷயத்தில், நீதிக்காக நிலைத்து நிற்பதில் ஒரு ஸ்திரத் தன்மை காணப்படும். மேற்கூரிய காரியங்கள் உங்கள் வாழ்க்கையில் காணப்பட்டபொழுது உங்களது எழுப்புதல் வாழ்க்கை ஒரு அனலாக காணப்பட்டது.

**இப்பொழுதோ :** உங்களது வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை. ஆத்மபாரம் மங்கிப்போய் விட்டது. ஜெபிக்கவும் முடியவில்லை. ஜெபித்தாலும் ஏதோ பெயருக்காகத் தான் என்று உங்கள் உள்ளம் உறுத்துகிறது. உபவாசிக்கவும் முடியவில்லை. பிறர் ஆவிக்குரிய வாழ்வில், ஊழியத்தில் பிரகாசிப்பதை காண்கையில் பொறாமையும் வேதனையும் காணப்படுகிறது. தேவ சித்தமோ, வெளிப்படுத்தலோ, வழிநடத்துதலோ இல்லை. ஆவிக்குரிய ஜீவியம் மங்கிவிட்டது. பிரச்சனைகள் கூடிக்கொண்டே போகிறதினால் பணம் இருந்தும் நிம்மதி இல்லை. உள்ளத்தில் நிறைவு இல்லை. வெறுமையே காணப்படுகிறது.

வசனத்தை வாசித்தாலும், நிம்மதியில்லை. தேவப்பிரசன்னமும் இல்லை. அந்நிய பாஷையில் பேசினாலும் மனதிலே ஆறுதல் இல்லை. பயம் கவ்விக் கொண்டே இருக்கின்றது. நடைபிணமாக நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்ற அங்கலாய்ப்புக்கு காரணம் என்ன என்று தவிக்கின்றீர்களா?

**ஆவிக்குரிய பெருமை :** உங்களுடைய வாழ்க்கையில் ஒரு பெருமிதம் காணப்பட்டது. ஏனெனில் பிறரைக் காட்டிலும், நீங்கள் பிரகாசித்ததால், நீங்கள் உங்களை கிறிஸ்துவோடு ஒப்பிடாமல் பிறரோடு ஒப்பீட்டீர்கள். பிறர் உங்களை பாராட்டினது, மெச்சிப் பேசியது உங்களுக்குள் சுயதிருப்தியை ஏற்படுத்தியது. “பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறார்” (1 பேதுரு 5:5) என்ற தேவ எச்சரிப்பை மறந்து விட்டீர்கள்.

**குடும்பத்தாரால் ஏமாற்றப்படுதல் :** உங்களுடைய பெற்றோரோ, சகோதரனோ, சகோதரியோ, கணவனோ அல்லது மனைவியோ கிறிஸ்துவுக்காக பிரகாசித்தப்பொழுது, அவர்களைக் குறித்து மகிழ்ச்சி அடைந்தீர்கள், அவர்களைச் சார்ந்திருந்தீர்கள். அப்படிப்பட்டவர் உங்களை சந்திக்க வந்தபொழுது, உங்களது ஜெபவேளை, வேத தியானத்தை விட்டுவிட்டு, வந்தவர்களிடம் உங்களது நேரத்தை செலவழித்தீர்கள். மேற்கூரியவர்கள் பின்மாறின பொழுது, கர்த்தர் உங்களுடன்

வசனத்தின் மூலம் இன்னும் பலவிதங்களில் எச்சரித்த பொழுது அதை உணராதபடி, அசட்டைபண்ணி ஏமாந்து போனீர்கள். வாலிப நாட்களில் கர்த்தருக்காக பிரகாசித்த ஒரு வாலிபனிடம், "உன் சகோதரரும், உன் தகப்பன் வம்சத்தாரும் உனக்குத் துரோகம்பண்ணி, அவர்களும் உன்னை பின்தொடர்ந்து ஆரவாரம் பண்ணினார்கள். அவர்கள் உன்னுடனே இனிய வார்த்தைகளைப் பேசினாலும் அவர்களை நம்ப வேண்டாம்" எரேமியா 12:6 மூலம் கர்த்தர் பேசினாராம். குடும்பப் பாசத்தால் அவர்களை நம்பி, தான் ஏமாந்தப் பின்னர் கடவுளின் வார்த்தை எவ்வளது உண்மையானது என்பதை உணர்ந்தாராம். "மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே" (மீகா 7:6).

**தேவ மக்களால் வஞ்சிக்கப்படுதல் :** சில தலைவர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள், விசுவாசிகள், உங்கள் வாழ்க்கையில் முதலிடம் பெற்றனர். அவர்கள் வார்த்தைகளை நம்பினீர்கள், செயல்களை பின்பற்றினீர்கள். இறுதியில் அவர்களிடம், பெருமை, பொறாமை, பொருளாசை, பொய், பகை, பேராசை, புறங்கூறுதல், இனவெறி முதலியவைகளை கண்டீர்கள். நீங்கள் அவர்களுடைய காரியங்களை வெறுத்தீர்கள். பின்பற்றவில்லை. ஆனால் மனதளவில் பாதிக்கப்பட்டீர்கள். அதனால் உங்களுக்குள் காணப்பட்ட எழுப்புதலின் அனல் குன்ற ஆரம்பித்தது. அப்படித்தானே!

**சுய நம்பிக்கை :** பரமப் பிதாவிடன் நெருங்கியிருந்த நாட்களில், கர்த்தரையே நம்புவேன் (சங்கீதம் 112:7,8). அவரையே பிரியப்படுத்துவேன். அவரையே பின்பற்றுவேன் (சங்.143:8-10). அவருக்கே பயந்திருப்பேன் என்று இருந்தீர்கள் (சங்.34:11). காலப்போக்கில் பலருடன் பழகியதில் ஒரு தீர்மானத்தின் சமயத்தில் தேவனுடைய சமூகத்தில் காத்திராமல் மனிதர்களிடத்தில் சென்றீர்கள். அவர்கள் வார்த்தைகளையும் நம்பினீர்கள். தேவன், தமது ஆவியின் மூலம் உங்களிடம் இடைபட்டபொழுது சுயத்திற்கும், சாத்தானுக்கும் இடங்கொடுத்து இறுதியில் ஏமாற்றம் அடைந்தீர்கள்.

## உயிர்ப்பிக்கப்பட வழி

**மெய் மனஸ்தாபம் :** உங்களது அனலற்ற வாழ்க்கையைக் குறித்து, ஆழ்ந்த உணர்வுடன் துக்கமடைந்து, கடவுளின் கரத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். கடந்த காலத்தை மறந்து விடுங்கள். கடந்த காலத்தை எச்சரிப்பாக மனதில் கொள்ளுங்கள். முழங்காலில் அமர்ந்து, திரும்பவும் கிறிஸ்துவுக்காக முன்செல்ல தீர்மானியுங்கள். "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்.... ஆகையால் நீ என்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" (வெளி.2:4-5).

**பாவ அறிக்கையும், அர்ப்பணமும் :** தேவனிடத்தில் அறிக்கையிட வேண்டிய காரியங்களை கடவுளிடமும், மனிதரிடத்தில் அறிக்கையிட வேண்டியவை. அவர்களிடமும் அறிக்கையிட்டு ஒப்புரவாகுங்கள்.

"நீ திரும்பினால் நான் உன்னை திரும்ப சீர்படுத்துவேன். என் முகத்துக்கு முன்பு நிலைத்துமிருப்பாய். நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்த என் வாய் போலிருப்பாய். நீ அவர்களிடத்தில் திரும்பாமல் அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 15:19).

உயிர்மீட்சியின் காலத்தில் கர்த்தருக்காக பிரகாசித்த நாட்கள், சோர்வான நாட்களில் உங்களுக்கு ஏற்பட்ட தாக்கம், இவைகளை சவாலாக எண்ணி கர்த்தருக்காக முன் செல்ல தீர்மானியுங்கள்.

இந்த செய்தி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்குமானால் ஆலோசனை பெற பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

# பரிசுத்த ஆவியானவர்

## 1. பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிட்ட சிறப்பு அடையாளங்களை பயன்படுத்தினர். ஏனென்றால் அவைகள் பல வார்த்தைகள் சொல்வதைக் காட்டிலும் அவரைப்பற்றி அதிக விளக்கங்களைத் தருகிறது.

**1. அக்கினி** (அப்.2:3)

விசுவாசிகளின் வாழ்வில் சுத்திகரிக்கும் சக்தியையும் (வல்லமையையும்) சொல்கிறது. (அப்.2:3; ஏசாயா 6:1-7). அக்கினி வெளிச்சம் காட்டுகிறது (சங்கீதம் 78:14).

**2. காற்று** (யோவான் 3:8)

காற்று அவரின் வல்லமையான புதுவாழ்வூட்டும் சக்தியைச் சொல்கிறது. காற்று அதன் விளைவுகளில் ஆற்றல் மிக்கதாயும், அதன் பலன்கள் பார்க்கக்கூடியதாகவும் இருக்கிறது.

**3. தண்ணீர்** (யோவான் 7:37-39)

தண்ணீர், ஆவிக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகள் நிரம்பி வழிய ஊற்றப்படுகிற அவரது வல்லமையைப் பற்றிப் பேசுகிறது (எபிரெயர் 10:22; சங்கீதம் 46:4).

**4.முத்திரை** (எபேசியர் 1:13)

முத்திரை, விசுவாசிகளின் மேல் அவருக்குள்ள உரிமையைச் சொல்கிறது.

**5. எண்ணெய்** (அப். 10:38)

எண்ணெய் ஊழியத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட அவரின் வல்லமையைச் சொல்கிறது. எண்ணெய் சுகமாக்குகிறது (வெளி.3:18) மட்டுமல்லாமல் ஆறுதல்படுத்துகிறது.

**6. புறா** (மாற்கு 1:10)

புறா, அவரின் கனிவான, மென்மையான, அமைதியான பண்பைச் சொல்கிறது.

## 2. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

**விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பின்வருமாறு கிரியை செய்கிறார்.**

1. பாவத்தைக்குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:9).
2. தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறார் (ரோமர் 5:5).
3. நமக்கு ஜெபிப்பதற்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே.6:18; அப். 4:23,24).
4. விசுவாசிகளைப் புதிதாக்குகிறார் (யோ.3:5; தீத்து 3:5).
5. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:11; 1கொரி.6:19).
6. விசுவாசிகளை முத்திரை போடுகிறார் (எபே.1:13,14).
7. நம்மை ஒன்றுபடுத்துகிறார் (1கொரி.12:13).
8. விசுவாசிகளை நிரப்புகிறார் (எபே.5:18).
9. சாட்சிகளாய் மாறுவதற்கு வல்லமையும், தைரியமும் தருகிறார் (அப். 1:8; 4:31; 6:9;10).
10. விசுவாசிகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14)
11. விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:1-11).
12. நம்மை ஆராதனை செய்ய வழிநடத்துகிறார்.
13. அவருடைய கனிகளை நம்மிலே வளரச் செய்கிறார்.
14. நம்மை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்கிறார்.
15. கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆர்வப்பட வைக்கிறார் (ரோமர் 8:23; வெளி.22:20).

## 3.ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

1. பரிசுத்த ஆவியை தூஷித்தல் (மத்.12:31,32).
2. பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பது (அப்.7:51).
3. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது (எபே.4:30,32).
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது (1தெச.5:19).
5. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது (அப்.5:3).

## 4. பரிசுத்த ஆவியின் கனிகள்

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23)

## 5. பரிசுத்த ஆவியின் வரங்கள் (1 கொரி. 12:8-10)

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்.
2. அறிவை உணர்த்தும் வரம்.
3. விசுவாசம்.
4. குணமாக்கும் வரம்.
5. அற்புதங்களைச் செய்யும் வரம்.
6. தீர்க்க தரிசனம் உரைக்கும் வரம்.
7. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்.
8. பற்பல பாஷைகளைப் பேசும் வரம்.
9. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம்

வாசிக்கவும் : மாற்கு 16:17-18; ரோமர் 12:6-8; எபேசியர் 4:8-13; 1பேதுரு 4:10-11).



# சங்கீத புஸ்தகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களிலும் மிகச்சிறந்த தியான நூல் சங்கீத புத்தகம். இப்புத்தகம், விசுவாசிகள் அன்றும், இன்றும், என்றும் பயபக்தியுடன் உபயோகிக்கும் ஜெப புத்தகமாகவும், இசை அமைத்துப் பாடுவதற்கு ஏற்ற பாடல்களாகவும் பயன்பட்டு வருகிறது.

நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காகவும், தேவையான சின்னச்சின்ன விளக்கங்களைத் தரவும், பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு தொடர் கட்டுரையாக "சங்கீத புஸ்தகம்" என்ற தலைப்பில் இவ்விதழில் ஆரம்பிக்கிறோம்.

### புத்தகத்தின் தலைப்பு

எபிரெய மற்றும் கிரேக்க மொழிகளில் இது, "துதிகளின் புத்தகம்" என்றும், "புல்லாங்குழல், யாழ், வீணை போன்ற இசைக்கருவிகளின் துணையுடன் இன்பமாய் பாடப்படும் பாடல்கள்" என்றும் அர்த்தம் கொள்ளுகிறது. கர்த்தரைத் துதிக்கும் துதி பாடல்களாகவும், ஜெபங்களாகவும் இப்பாடல்கள் வெளிப்பட்டன. இஸ்ரவேல் ஜனங்கள் சங்கீத புத்தகத்தைத் தங்கள் ஜெபப் புத்தகமாகப் பயன்படுத்தினர்.

### எழுதப்பட்ட காலம்

மொத்தமுள்ள 150 சங்கீதங்களில் 90-ம் சங்கீதம் மிகப் பழமையானது; இது ஆரோன் மரித்தபோது மோசே பாடின சங்கீதமாகும். எனவே இது கி.மு.1500-ம் ஆண்டு காலக்கட்டத்தில் எழுதப்பட்டது எனலாம். 137-ம் சங்கீதம் இஸ்ரவேலர் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுச் சென்றபோது எழுதப்பட்டது, கி.மு.606-586). எனவே தோராயமாக கிமு 1500க்கும் இடைப்பட்ட 1000 ஆண்டு இடைவெளியில் சங்கீதங்கள் எழுதப்பட்டு உருவேற்பட்டன எனலாம்.

### சங்கீதங்களை எழுதியவர்கள்

பொதுவாக "சங்கீதம்" என்றாலே தாவீது எழுதியது எனப் பொதுப் பெயரைக் கொடுப்பவர்கள் உண்டு. ஆனால் எல்லா சங்கீதங்களும் தாவீதால் எழுதப்பட்டவை அல்ல.

### மொத்த சங்கீதங்கள் : 150

1. **தாவீது எழுதியவை 73 சங்கீதங்கள்.** இவரைக்குறித்து 2 சாமுவேல் 23:1-ம் வசனத்தில் இப்படி வாசிக்கிறோம், "...மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன்... "இந்த தாவீது தேவாலய ஊழியத்துக்கு குறிப்பிட்ட நபர்களைப் பிரித்தெடுத்து ஏற்படுத்தியபோது, அவர்களுள் சங்கீதங்களைப் பாடும் பாடகர்களையும் ஏற்படுத்தினான் (1நாளா.15:16; 16:7; 25:1).
2. **கோராகின் புத்திரர் எழுதியவை 11.** (சங்கீதம் 42-49; 84; 85;87). கோராகின் புத்திரர் தேவாலயத்தில் சங்கீத சேவைக்காரராகத் தங்கள் முறைமையின்படியே

பணிவிடை செய்துவந்தனர் (1 நாளா.6:31-47). லேவி கோத்திரத்தில் பிறந்த கோராகு என்பவன் தாத்தான், அபிராம். ஓன் ஆகியோரைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு, மோசேக்கும், ஆரோனுக்கும் எதிர்த்து நின்று கலகம் செய்தான். அதற்கு தண்டனையாக, பூமி தன் வாயைத் திறந்து கோராகுவின் கூட்டத்தாரில் 250 பேரை விழுங்கிப்போட்டது (எண்.16). இந்த திடுக்கிடத்தக்க தேவ நியாயத்தீர்ப்பைத் தங்கள் சொந்தக்கண்களால் கண்ட கோராகுவின் புத்திரர், தலைமைக்குக் கீழ்படிவதற்கும், பரிசுத்தத்துக்கும், கர்த்தரைப் பாடுவதற்கும் தங்களை அர்ப்பணித்தனர். அவர்கள் எழுதி இசையமைத்துப் பாடிய பாடல்களே "கோராகின் புத்தரர் எழுதிய 11 சங்கீதங்கள்" என்பது பாரம்பரிய நம்பிக்கையாகும். (இது ஆச்சரியப்படத்தக்க மனந்திரும்புதலே!).

3. **ஆசாப் எழுதியவை 12 (சங்.50, 73-83).** தாவீது தனது அரசவையில் கர்த்தரைப் பிரஸ்தபாம் பண்ண துதித்துப் புகழுகிறதற்குக் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகச் சேவிக்கத்தக்க லேவியர் சிலரை நியமித்தனர். அவர்களில் ஆசாப் தலைவனாயிருந்தான் (1நாளா.16:45). ஆசாப் சாலமோனின் அரசவையிலும் இந்த இசைப்பணியை தொடர்ந்தான் (2 நாளா.5:16).

4. **சாலமோன் ராஜா எழுதியது 2** (சங். 72, 127).

5. **ஏத்தான் எழுதியது 1** (சங்.89) இவன் சாலமோன் காலத்தில் வாழ்ந்த சங்கீதக்காரன்; தனது மிகுந்த ஞானத்தினால் சங்கீதங்களை இயற்றிப்பாடியவன் (1 ராஜா.4:31).

6. **ஏமான் எழுதியது 1** (சங்.88). இவன் ஒரு பாடகன்; துதிசெய்யும் ஊழியத்தைச் செய்ய தாவீது இவனை ஏற்படுத்தினான். இவன் ராஜாவின் ஞான திருஷ்டிக்காரனாய் இருந்தான் (1 நாளா.6:33).இவன் பாடிய 88-ம் சங்கீதம், எல்லா சங்கீதங்களிலும் சோகம் மிகுந்த சங்கீதமாகக் கருதப்படுகிறது.

7. **மோசே எழுதியது 1** (சங் 90). தன் சகோதரனாகிய ஆரோன் மரித்தபோது ஜெபமாகப் பாடப்பட்ட சங்கீதம் இது. சங்கீதம் 90:16ல் "எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே, அது சீக்கிரமாய் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்; என மோசே பாடுவது மனுஷனுடைய ஆயுசு நாட்கள் எழுபதிலிருந்து எண்பது வரை மட்டுமே" என பலர் தவறாக விளக்கம் தருவர். ஆனால் இந்த சங்கீதம் எழுதப்பட்ட பின்னணியத்தில் இந்த வசனத்தை விளங்கிக்கொள்ளுதல் அவசியம். எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலரில் காலேபும், யோசுவாவும் தவிர, இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வனாந்திரத்தில் மாண்டனர்'' (எண்.14:26-34) ஏராளம். இளவயது மரணங்களைக் கண்டான் மோசே; தனது சகோதரன் ஆரோன் 123 வயதில் மரித்தாலும் (எண்.33:39) முதிர்வயதாகுமுன்னே மரித்தத் திரள் கூட்டத்தினரை எண்ணி, மனுஷனுடைய ஆயுசுநாட்கள் குறைவே என்பதை வலியுறுத்தி இந்த வசனத்தை எழுதினானே தவிர, எல்லாரும் எழுபது வந்தவுடன் மேலோகம் செல்லப் புறப்பட வேண்டும் என்று எழுதவில்லை என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும்.

இந்த சங்கீதத்தை எழுதிய மோசே 120 வயது வரை வாழ்ந்தான் (உபா.34:7). யோசுவா மரிக்கும்போது அவனுக்கு 110 வயது (யோசுவா 24:29). காலேபும் 123 வயதில்தான் மரித்தான். (எண்.33:38,39).

மேற்கூறிய ஏழு சங்கீதக்காரர்கள் எழுதிய 101 சங்கீதங்கள்போக, மீதமுள்ள 49 சங்கீதங்களை யார் எழுதியுள்ளார்கள் என்று தெளிவுறக்கூற இயலவில்லை. எனினும் 150 சங்கீதங்களுமே தியானத்திற்கேற்ற ஆவிக்குரிய ஒப்பற்றப் பாடல்கள் ஆகும்.

## சங்கீத புத்தகத்தின் பொருளடக்கம்

சங்கீதங்கள் செய்யுள் அல்லது பாடல்களாக இருப்பதால் சங்கீத புத்தகத்திலுள்ள 150 சங்கீதங்களையும் "அதிகாரம்" எனக்கூறாமல் "சங்கீதம்" என்று குறிப்பிடுவதே சரியானதாகும்.

**150 சங்கீதங்களையும் ஐந்து புத்தகங்களாகப் பிரிக்கலாம் :**

மோசே எழுதிய பஞ்சாகமத்தின் ஐந்து புத்தகங்களுக்கும், இவை ஒவ்வொன்றும் இணையானவை அல்லது ஒத்தவை எனக் காணலாம்.

**புத்தகம் I** - சங்கீதம் 1 முதல் 41 வரை : ஆமென், ஆமென் என 41-ம் சங்கீதம் முடிவதை கவனியுங்கள். மனிதன் என்பது இவற்றின் கருப்பொருளாகும்.

இந்த சங்கீதங்களைத் தியானிக்கையில் ஆதியாகமப் புத்தகத்தை இணை நூலாகச் சேர்த்து வாசித்தல் பயன்தரும்

**புத்தகம் II** - சங்கீதம் 42 முதல் 72 வரை

72 வது சங்கீதம் "....தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது" என முற்றுப்பெறுவதைக் கவனியுங்கள். "விடுதலை" என்பது இந்த சங்கீதங்களில் காணப்படும் கருப்பொருள். யாத்திராகமம் புத்தகத்துக்கு இணையான பல கருத்தாழங்களை இந்த சங்கீதங்களில் காணலாம்.

**புத்தகம் III** - சங்கீதம் 73 முதல் 89 வரை

"ஆமென், ஆமென்" என 89-ம் சங்கீதம் முடிவதைப் பாருங்கள்!. "பரிசுத்தம்" என்பது இத்தொகுப்பின் மையப்பொருள். இந்த சங்கீதங்களை, லேவியராகமம் புத்தகத்துடன் இணைத்துப் படித்தல் மிகுந்த பலன் தரும்.

**புத்தகம் IV** - சங்கீதம் 107 முதல் 150 வரை

150 வது சங்கீதத்தின் கடைசி வசனம் "அல்லேலூயா" என முடிவாகக் கூறுகிறது, உபாகமப் புத்தகத்தின் மையக்கருத்தானது "தேவனுடைய வார்த்தை" என இருப்பதுபோன்று, இக்கடைசிப்பகுதி சங்கீதங்களின் மையக்கருத்தும் தேவனுடைய வார்த்தையே ஆகும். தேவனுடைய வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ள 176 வசனங்களைக் கொண்ட நீண்ட 119-ம் சங்கீதம் இப்பகுதியில்தான் உள்ளது.

மேற்கண்ட ஐந்து சங்கீதங்களின் தொகுப்புகளின் உள்ளே உப-புத்தகங்களாக கீழ்காண்பவற்றைக் காணலாம்,

1. ஆரோகண சங்கீதங்கள் (சங். 120-134);
2. ஆசாபின் சங்கீதங்கள் (சங். 73-83)
3. கோராகின் புத்திரரின் சங்கீதங்கள் (சங்.42-49);
4. அல்லேலூயா சங்கீதங்கள் (சங். 113-118, 146-150)

## சங்கீதங்களைத் தொகுத்துத் தந்தவர்கள்

இஸ்ரவேலின் இராஜாக்களாகிய தாவீது, எசேக்கியா ஆகிய மன்னர்களும், கர்த்தருடைய வேதத்தில் தேர்ச்சி பெற்ற எஸ்றா என்ற வேதபாரகனும் இந்த சங்கீதப் புத்தகங்களை நான்கு புத்தகங்களாகத் தொகுத்து வடிவமைத்தனர் எனலாம்.

## சங்கீதங்களின் சிறப்பு

நானூறு தடவைக்கும் அதிகமாக, புதிய ஏற்பாட்டில் சங்கீதப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. நமதாண்டவராகிய இயேசுவும், புதிய ஏற்பாட்டின் சபைத்தலைவர்களும் சங்கீதங்களிலிருந்து மேற்கோள்காட்டிள்ளனர்.

கீழ்க்காணும் சரித்திர சம்பவங்களை சங்கீதங்கள் தரும் பின்னணியத்தில் வாசித்துப்பாருங்கள். மிகுந்த பலன்தரும். சிருஷ்டிப்பு (சங்கீதம் 8). நோவா காலப் பெருவெள்ளம் (சங்கீதம் 29). கோத்திரப்பிதாக்கள் (சங்.47:9;105:9;47:4), யோசேப்பு (சங்.105:17-23). இஸ்ரவேலின் விடுதலைப் பயணம் (சங்.114). இஸ்ரவேல் வனாந்திர அலைச்சல்கள் (சங்.68:7;106:1-46), இஸ்ரவேலரின் சிறையிருப்பு (சங்.85, 137).

பொதுவாக சங்கீதங்கள் தேவனுக்கும் அவரது சிருஷ்டிகளுக்குமிடையே யுள்ள உறவினை எடுத்துரைக்கின்றன, சர்வ வல்லமையுள்ள தேவனாகக் காணப்படும் நமதாண்டவர், மிகுந்த காருண்யமுள்ள தகப்பனாகவும், தமது வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவராயிருந்து, தமது ஜனங்களை மிகவும் கரிசனையுடன் கவனித்துக்கொள்கிறார்.

இந்த தேவனை விசுவாசித்துப் பின்செல்லும் மக்களின் மனநிலை, அவர்களது இயலாமைகள், தோல்விகள், வெற்றிகள் ஆகியவை பற்றியும் சங்கீதங்கள் நமக்குத் தருகின்றன.

தேவனை நோக்கிக் கதறி கூப்பிடும் திரள்கூட்ட மக்களைப் பற்றியும், உள்ளம் உருகி, அவரை ஆராதித்து, ஆழமான பக்தியுடன் அவரைத்தேடும் பரிசுத்தவான்கள் பற்றியும் சங்கீதங்களில் நாம் காண்கிறோம்.

**சங்கீதம் நமக்குப் போதிப்பது என்ன?**

தேவனைத் தேடுங்கள், முழு இருதயத்தோடும் அவரைத் தேடுங்கள். அவரிடமிருந்து நமக்கு என்ன கிடைக்குமென்பதற்காக அல்ல, அவர் தேவனாயிருக்கிறபடியினால் அவரைத் தேடுங்கள், ஆராதியுங்கள். உங்கள் தேவைகள், தோல்விகள், வெறுப்புகள், விருப்பங்கள், மகிழ்ச்சிகள் எல்லாவற்றையும் அவரிடம் சொல்லுங்கள்.

வாழ்க்கையில் பாடுகளை எப்படி மேற்கொள்ளுவது, அவற்றை வெற்றியாய் மாற்றிக்கொள்ளுவது எப்படி என்பனவற்றையும் சங்கீதங்கள் நமக்குக் கற்பிக்கின்றன.

மனந்திரும்புங்கள், தேவனுடைய மகாபெரிய பாவமன்னிப்பைப் பெற்று, கிருபையில் வாழுங்கள். ஏனெனில் அவர் உன்னதராயிருந்தும், யாருக்கும் தூரமானவரல்ல. அவர் நமது வாழ்க்கைத் துணையாய், இம்மானுவேலாய், என்றென்றும் நம்மோடு வருவார். இவைதவிர இன்னும் ஏராளம் ஆழங்களை ஒவ்வொரு சங்கீதத்திலிருந்தும் தோண்டி எடுத்து பயன்பெற முடியும்.

முன்னுரையாய் சொல்லப்பட்ட மேற்கண்ட சில பத்திகள் பயன்தரும் என நம்புகிறோம். பல்வேறு பயனுள்ள சத்தியங்களை சங்கீதப் புத்தகத்திலிருந்து வரும் இதழ்களில் காண்போம்.

# பிலேயாமின் இரட்டை வேடம்



பிலேயாமின் வாழ்க்கையை மூன்று நிலைகளாக பிரிக்கலாம்.

**1. கர்த்தருடைய தீர்க்கதரிசி :**

பழைய ஏற்பாட்டில் புறஜாதியாரான தீர்க்கதரிசிகள் ஏழு பேர் இருந்தனர். அவர்களில் ஒருவன் பிலேயாம். மற்றவர்கள் பிலேயாமின் தகப்பன் பேயோர், யோபு மற்றும் யோபுவின் நான்கு நண்பர்கள் ஆவர். பிலேயாம் கர்த்தராகிய யெகோவா தான் உண்மையான தெய்வம் என்று அறிந்து, அவரை ஆராதித்தான். பிலேயாம் கர்த்தருடன் நல்ல உறவு கொண்டிருந்தான். ஆகையால் கர்த்தர் அவனுடன் உரையாடினார். மோவாபின் இராஜாவாகிய பாலாக் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கச் சொல்லி பிலேயாமை அழைத்தான். பிலேயாம் முதன் முறை வரமுடியாது என்று மறுத்தான். ஆனால் பாலாக் மீண்டும் மீண்டும் அதிகமான வெகுமதிகளை தனது பிரபுக்களிடம் கொடுத்து அனுப்பியபோது பிலேயாம் கர்த்தரிடம் தான் பாலாக்குடன் செல்ல அனுமதி தரும்படி ஜெபித்தான். பிலேயாம் புறப்பட்டு சென்றபோது கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராக நின்றார் (எண்.22:22). அது பிலேயாமுக்கு தெரியவில்லை.ஆனால் அவன் ஏறி சென்ற கழுதைக்கு தெரிந்தது. அற்புதவிதமாக கழுதை வாய் திறந்து பேசி கர்த்தரின் தூதனானவர் எதிரில் நிற்பதை பிலேயாமுக்கு சொன்னது. அதனால் அவன் உயிர் தப்பிப்பிழைத்தான் (எண். 22:21-29). பாலாக் இஸ்ரவேலரை சபிக்கும்படி கூறி பிலேயாமை கிரியாத் ஊசோத், பிஸ்கா மற்றும் பேயோர் என்னும் மூன்று உயரமான இடங்களுக்கு அழைத்துச் சென்றான். மூன்று இடங்களிலும், மூன்று முறையும் பிலேயாம் இஸ்ரவேலை ஆசீர்வதித்தான்.

**2. மனிதனுடைய தீர்க்கதரிசி :**

பிலேயாம் தான் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்ற உயர்ந்த நிலையை மறந்து மோவாபின் இராஜாவாகிய பாலாக்கை பிரியப்படுத்த எண்ணங்கொண்டு, தான் ஏதோ பாலாக் என்ற தனிமனிதனுடைய தீர்க்கதரிசி என்பது போல் அவன் சொல்வதை செய்ய முற்பட்டான். மூன்று முறைகள் இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதித்து கர்த்தரைப் பிரியப்படுத்திய பிலேயாம், பின்னர் பாலாக் கொடுத்த பணத்தையும் வெகுமதிகளையும் இச்சித்து, அவனை பிரியப்படுத்த முயற்சித்தான். பொருளாசை என்னும் பாவ இச்சையினால், அவன் அநீதியினால் வரும் கூலியை விரும்பினான் (யூதா 1:11; 2 பேதுரு 2:15).

**3. சாத்தானுடைய தீர்க்கதரிசி :**

கர்த்தருடைய தீர்க்கதரிசியாய் இருந்த பிலேயாம், பண ஆசையினால் மனிதனுடைய தீர்க்கதரிசியாக நிலைமாறி பின்பு முற்றிலும் பாவத்தில் வீழ்ந்து சாத்தானுக்கு அடிமையாகிப் போனான். இதனால் பிலேயாம் பொல்லாத திட்டம் வகுத்து, இராஜாவாகிய பாலாக்கிடம் “நீர் மோவாபிய பெண்களைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை சோதித்து, விக்கிரக ஆராதனை, வேசித்தனம் என்னும் பாவங்களுக்கு உட்படப்பண்ணினால், அவர்கள் தங்கள் ஆசீர்வாதங்களை இழந்து போவார்கள்”, என்று கேடான ஆலோசனை கூறினான் (எண். 25:1-9). அவ்வாறே இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்து தேவ கோபத்திற்கு உள்ளாயினர் (வெளி.2:14).பிலேயாமுடைய ஆவிக்குரிய பின்னடைவு/பின்மாற்றம் அவனுடைய மரணத்தில் முடிவுற்றது. கர்த்தருடைய கோபத்திற்கு உள்ளாகி அவன் பட்டயத்தால் வெட்டுண்டு மடிந்தான் (யோசுவா 13:22).

பிரியமானவர்களே நாம் சற்றே சிந்திப்போம். “நான் யாரை பிரியப்படுத்துகிறேன்? கர்த்தரையா?, மனிதர்களையா? அல்லது சாத்தானையா? என் மனம் பொருளாசையினால் நிறைந்திருக்கிறதா?” என்று நம்மை நாமே ஆராய்ந்து அறிவோம்.

Rev. Dr. J.N.மனோகரன்.



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# எழும்புவோம் இயேசுவுக்காய்

Rev. ஜெகில் எபிதாஸ்
சென்னை வடக்கு மண்டலம், தலைமைப் போதகர்

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களுக்கு :**

நம்முடைய ஆண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவன், மனிதனை தேவசாயலாக படைத்து, அவர்களோடு அன்றாட வாழ்க்கையில் உலாவ விரும்புகிற தேவன். முதல் மனிதர்களாகிய ஆதாம், ஏவாளை படைத்து பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவி அவர்களோடு உறவுகொள்ள விரும்புகிற தேவன். ஆதி.3:8 சொல்கிறது : பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு " நீ எங்கே இருக்கிறாய்" என்றார்.

**1. முதல் மிஷனெரியின் சத்தம் :**

நீ எங்கே இருக்கிறாய். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இன்றைக்கும் இந்த சத்தம் தேசமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. சர்வ வல்லமையுள்ள தேவன் ஒவ்வொருவரையும் தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் அநேகர் அவருடைய சத்தத்தைக் கேட்டு அவர்களுடைய பாவங்களினால், சமுதாய கட்டுகளினால், தேவனிடம் நெருங்கி வரமுடியாதபடி ஒளித்துக்கொண்டிருக் கிறார்கள். இன்றைக்கும் ஆண்டவருடைய அழைப்பு பட்சபாதமின்றி அவர் எல்லோரையும் தன்னிடம் சேர்த்துக்கொள்ள ஆசையோடு தேடிவருகின்றார். ஆனால் நாம் அவருடைய சத்தத்தை கேட்டும் கேளாதவர்கள் போலவும், சிலர் கேட்டு ஒளித்துக்கொள்ளவும் செய்கிறார்கள். என்னுடைய பன்னிரண்டாவது வயதில் நான் மரணப்படுக்கையில் இருந்தபோது இயேசு என்னை தொட்டு சுகப்படுத்தி எனக்கு ஒரு புது வாழ்வை கொடுத்தார். அந்தநாள் முதல் இன்றுவரை அவருக்காக வாழ என்னை அர்பணித்துவிட்டேன். இனி வாழ்வது நானல்ல என்னில் இயேசு வாழ்கிறார்.

**2. அழிந்து போகின்ற மக்களின்மேல் பாரம் :**

அப்.17:16 ''அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்குக் காத்துக்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து" கிறிஸ்தவர்களை துன்பப்படுத்திய சவுலை சந்தித்து அவனுடைய வாழ்க்கையை மாற்றி தேசங்களுக்கு ஆசீர்வாதமாய் மாற்றினவர், உங்களுக்கும் அழிந்துபோகின்ற மக்களைக் குறித்த பாரத்தை தேவன் நிச்சயம் தருவார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நம்முடைய ஆவி கர்த்தருடைய ஆவியோடு இணைந்திருந்தால் தான் தேசத்தில் நடைபெறும் கொடூரமான செயல்களை பார்க்கும்பொழுது, நம்முடைய இருதயம் பாரத்தால் நிரம்பும்.

சென்னைக்கு அருகாமையில் இருக்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தண்ணீருக்குள் 40 வருடமாய் மூழ்கி இருந்த கடவுளைத் தேடி கண்டுபிடித்து படுக்கும் நிலையில் தரிசனம், நிற்கும் நிலையில் தரிசனம் என்று சொல்லும்போது அந்த தேவர்களை பார்க்க இலட்சம் இலட்சமாய் மக்கள் கூட்டம் கூட்டமாய் வரிசையில் நின்று, பசியோடு, சில உயிர்கள் கூட்ட நெரிசலில் நசுங்கி மரித்துபோனாலும் அந்த தெய்வத்தை பார்க்க கூட்டமாய் வரும் நம் சொந்த சகோதரர்களை பார்க்கும்பொழுது நம்முடைய இருதயத்தில் ஏற்படுகிற பாரம்தான், ஆவியில் வைராக்கியத்தைக் கொண்டு வருகிறது. நம் இந்திய தேச ஜனங்கள் கடவுள் பக்தியுள்ளவர்கள். ஆனால் உண்மையான உயிருள்ள கடவுள் யார் என்பதை அறிவித்து வழிகாட்ட பவுலை போன்ற ஊழியர்கள் எழும்பாததினால் தான் நம்முடைய சொந்த சகோதர சகோதரிகள் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை புனித பயணம் செய்கிறார்கள்.

அன்பானவர்களே, இவர்களுக்காய் தினமும் ஒருமணி நேரம் உங்கள் திருச்சபைகளில் ஜெபிக்கக் கூடாதா? ஒரு இந்திய வரைபடம், தமிழ்நாட்டின் வரைபடம், உங்கள் மாவட்டத்தின் வரைபடத்தை வைத்து ஜெபியுங்கள். நான் இந்தியாவிற்காக பன்னிரண்டாவது வயதிலிருந்தே ஜெபிக்க ஆரம்பித்தேன்.

ஊழிய பாரம் பெற்ற, அந்த வயதிலிருந்தே சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், சபையின் போதகரோடு இணைந்து சபைக்கு அருகாமையில் உள்ள இடங்களில் ஞாயிறு மாலை 3.00 மணியிலிருந்து 5.00 மணிவரை சுவிசேஷ ஊழியத்தில் கலந்துகொள்வேன்.

இன்றைக்கு அநேகர் சபையில் போதகரோடு மேடையில் நிற்கும் பலிபீட ஊழியத்தைதான் விரும்புகிறார்கள். முதலாவது நம்முடைய ஊழியம் நாம் படிக்கும் இடத்தில். வேலைசெய்யும் இடத்தில், நம்முடைய சபையை சுற்றியுள்ள இடங்களில் செய்ய நம்மை அர்ப்பணிப்போமாக, இயேசுவை ஏற்றுக் கொள்ளாத ஒவ்வொரு இருதயமும் மிஷனரி பணித்தளம் தான்.

**3. வட இந்தியபாரம் :**

இன்றைக்கு தமிழ்நாட்டில் ஐம்பதாயிரம் பெந்தெகொஸ்தே சபைகள் இருக்கின்றது என்று புள்ளிவிபரங்கள் கூறுகிறது. சென்னை பட்டணத்தில் மட்டும் ஆறாயிரம் திருச்சபைகள் இருக்கின்றன. திருச்சபைகள் எங்கு பார்த்தாலும் வளர்ந்து வருகின்றது. இந்த எழுப்புதல் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகாவில் தான் காணப்படுகின்றது. இந்த எழுப்புதலின் தீயானது இந்தியா முழுவதும் பரவ உங்கள் திருச்சபை ஊழியரோடு வட இந்தியாவில் உள்ள ஒரு மாநிலத்திற்காய் சந்திக்கப்படாத ஒருமக்கள் கூட்டத்திற்காய் ஜெபியுங்கள். நம்முடைய தமிழ் பிரதேசத்திலுள்ள இரண்டாயிரம் சபைகளில் 500 சபைகள் வருடத்தில் ஒரு சபை ஒரு மிஷனரி என்கின்ற தரிசனத்தில் நாம் வட இந்தியாவில் செயல்பட்டால் இயேசுவின் இரத்தம் வீணாய்போகாது.

ரோமர் 10:1-ல் பவுல் சொல்வதுபோல்: "சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட்ட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது'. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

எழும்புவோம் இயேசுவுக்காய் ! செயல்படுவோம் இந்தியாவிலே !!

# தமிழ் பிரதேச மிஷனரி இயக்க அறிக்கை

**மிஷன் பிரயாணங்கள்**

ஜூன் மாதம் 22-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை Rev.எட்வின் பிரபாகர், Rev.ஜெகில் எபிதாஸ், Rev.ஐசக் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பீகார் மாநிலத்திற்குச் சென்று நமது தமிழ் பிரதேசத்திலிருந்து உதவி பெறுகிற மிஷனரிகளை ஒருங்கிணைத்து இரண்டு நாட்கள் மிஷனரி எழுப்புதல் கருத்தரங்கு மற்றும் 12 மணி நேர ஜெபங்களை நடத்தி மிஷனரிகளை உற்சாகப்படுத்தி வந்துள்ளனர். Rev. பாப்ராஜ் அவர்கள் ஊழியங்களை ஒழுங்கு செய்தார்கள்.

**மிஷன் கன்வென்ஷன்கள்**

5.05.2019 அன்று புளியங்குடி மண்டல திருச்சபைகளின் சார்பாகவும், 24.06.2019 அன்று கோவை வடக்கு மண்டல திருச்சபைகளின் சார்பாகவும், 14.07.2019 அன்று மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு மண்டல திருச்சபைகளின் சார்பாகவும், 21.07.2019 அன்று திருச்சி மண்டல திருச்சபைகளின் சார்பாகவும் மிஷன் கன்வென்ஷன்கள் சிறப்பாக நடைபெற்றது. மண்டலத் தலைமைப் போதகர்களோடு இணைந்து மண்டல மிஷன் தலைவர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

**மிஷன் தலைவர்களின் குடும்பக் கூடுகை**

2019 ஜூன் மாதம் 25,26 ஆகிய தேதிகளில், கேரள மாநிலம் ஆலுவாவில் உள்ள YMCA-ல் வைத்து மிஷன் இயக்க தலைவர்களின் குடும்ப கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையில் மிஷன் பொறுப்பாளர்கள், அவர்களது துணைவியர் மற்றும் பிள்ளைகள் உட்பட சுமார் 105 பேர் கலந்துகொண்டனர். அதிரபள்ளியில் உள்ள நீர் வீழ்ச்சி, கொச்சின் கடற்கரை படகு பயணம் மற்றும் யூத ஜெப ஆலய சுற்றுலா போன்றவை இக்கூடுகையின் சிறப்பு அம்சங்களாக இருந்தது.

**மிஷன் இரவு ஆராதனை**

நடந்து முடிந்த நமது 71-வது ஊழியர் மாநாட்டில் மிஷன் இரவு ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. Rev.D.மோகன் அவர்களின் செய்தியும், Rev.A.ஆபிரகாம் தாமஸ் அவர்களின் மிஷனரி பிரதிஷ்டையும் (6 பேர்), ஜெபமும் முக்கியத்துவம் வாய்ந்தது. பாடல் ஆராதனை. பாடலுக்கேற்ற நடனம் மற்றும் நாடகம் அனைத்தும் சிறப்பாய் அமைந்தது. ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து போதகர்களுக்கும் மிஷன் இயக்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**கைரோஸ் பயிற்சி**

மிஷன் தலைவர்களுக்கான முதற்கட்ட ஆரம்ப கைரோஸ் பயிற்சி கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளாதவர்களுக்காக மீண்டும் 2019 ஜூலை 22 முதல் 25-ம் தேதி வரை நமது ஏஜி, கேம்ப்சைட்டில் வைத்து அதே பயிற்சி நடைபெற்றது. மிஷன் பொறுப்பாளர் மட்டுமின்றி இந்த ஆண்டு மிஷனரிகளாக செல்பவர்களும், நமது பிரதேச போதகர்கள் 2 நபர்கள் உட்பட மொத்தம் 29பேர் கலந்துகொண்டனர். பாஸ்டர் பாஸ்கர் (பெங்களூர்) அவர்கள் சிறப்பான முறையில் இப்பயிற்சியை அளித்தார்கள். இப்பயிற்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

**ஜெப விண்ணப்பங்கள்**

◆ பஞ்சாப் மாநிலத்தில் ஊழியம் செய்கிறதான மிஷனரி லாசரஸ் அவர்களின் மனைவியும் (அர்ச்சனா, வயது 28) மிஷனரி விஜயக்குமார் அவர்களின் தகப்பனாரும்

கடந்த நாட்களில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்களின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்ளவும்.

◆ பீகார் மாநிலம் காயாவில் ஊழியம் செய்கிற மிஷனரி அஜய்குமார் சிங் மற்றும் மதுபானியில் ஊழியம் செய்கிற மிஷனரி சுரேஷ் அவர்களின் மனைவிமார்களின் உடல் சுகத்திற்காக ஜெபித்துக்கொள்ளவும்.


◆ நமது தமிழ் பிரதேசத்தால் தாங்கப்படுகிற சுமார் 650-க்கும் மேற்பட்ட மிஷனரிகளின் குடும்பங்கள், சபை விசுவாசிகளின் சுகத்திற்காக ஜெபிக்கவும்.

◆ மிஷனரிகளின் தேவைகள் சந்திக்கப்படவும், தேவன் அவர்களை வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

◆ மிஷன் பணித்தளங்களில் ஆலய கட்டுமான பணி மற்றும் சபைக்கென இடங்கள் வாங்கப்பட ஜெபிக்கவும்.

## ராஜ்புத்-இந்து மக்களினத்திற்காக ஜெபியுங்கள்

**மக்கள் இனம்** : ராஜ்புத், இந்து; **மொழி** : இந்தி; **மக்கள் தொகை** : 4,53,89,000; **கிறிஸ்தவர்கள்** : 0.02%



**நம்பிக்கை :** பல தெய்வ வழிபாட்டின் மீது நம்பிக்கையுடைய இவர்கள் மும்மூர்த்தி கடவுள்களை பிரதானமாக வணங்குகின்றனர். தசரா பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் இவர்கள் பண்டிகையின் போது சாத்தானின் அடையாளமாக கருதப்படும் எருமைமாட்டை பலியாக செலுத்துகின்றனர். தங்களது பக்தி மற்றும் சடங்காச்சாரங்களைப் பற்றிய பதிலை பெற இந்து குருமார்களை அணுகுகின்றனர். தங்களை உயர்ந்த ஜாதியாக கருதும் இவர்கள் ஜாதி பற்றுடையவர்கள்

**அதிகம் வாழும் பகுதி :** உத்திரபிரதேசம், ராஜஸ்தான்

**தத்தெடுத்துள்ள மண்டலம் :** புளியங்குடி

## மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

**1. பாஸ்டர்: ஜஸ்வந்த் சிங், ஹரியானா :** எங்களது சபை விசுவாசிகளின் உறவினர் சகோதரி ஜித்து என்பவர் கடந்த 14 ஆண்டுகளாக பிசாசின் தொந்தரவினால் மிகவும் மனவேதனையுடன் காணப்பட்டு வந்தார். பல இடங்களுக்கு சென்றும் பணத்தை செலவழித்தும் விடுதலையில்லாமல் காணப்பட்டார். எங்கள் சபையில் இருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் வசிப்பதால் அவர்களை சபைக்கு அழைத்து வருவது கடினமாக காணப்பட்டது. நாங்கள் கடந்த மாதத்தில் அவர்கள் வசிக்கும் கிராமத்திற்கு சென்று சுவிசேஷம் அறிவிக்க சென்றபோது அவர்களை சந்தித்து ஜெபித்தோம். சகோதரி ஜித்து பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். இவர்களின் மூலம் சுமார் 8 குடும்பங்கள் தேவனை விசுவாசித்து சபைக்கு வந்து கொண்டிருக்கின்றனர். அக்கிராமத்தில் புதிய ஜெப மையத்தை தொடங்கவும் தேவன் அனுக்கிரகம் செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**2. பாஸ்டர் ராஜ் பாரதி, பாட்னா :** எங்கள் சபைக்கு அருகாமையில் வசிக்கும் குலாமஹியா என்பவர் பாரதிய ஜனதா கட்சியின் கிராம அதிகாரியாக உள்ளார். எங்களை பார்க்கும்போதெல்லாம் தகாத வார்த்தைகளை பேசியும், சபைக்கும் அச்சுறுத்தலாகவும் காணப்பட்டார். அவருக்காக ஜெபித்து வந்தோம். கடந்த நாட்களில் நடந்து முடிந்த தேர்தல் நேரத்தில் அவர் சபைக்கு வந்து ஜெபிக்கும்படி கேட்டதோடு, மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். அவருக்காய் ஜெபித்தோம். கர்த்தர் அவருக்கு மனமாற்றத்தை கொடுத்துள்ளார். இப்பொழுது நன்றாக பேசி பழகுகிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்

**இந்த மிஷனரியை தாங்கும் சபை :** பாஸ்டர் மார்வின் டேவிஸ், ராதாபுரம்.



# சீஷர்களின் தொகை பெருக வேண்டும்

Rev. J. தேவதாசன் கலையரசன்
மூத்த போதகர், பெத்தேல் ஏஜி. சர்ச், குளத்தூர்

**முந்தின கட்டுரையின் சுருக்கம் :**

முந்தின இரண்டு கட்டுரைகளின் சுருக்கம் இதுதான். சீஷத்துவப் போதனையை, நற்செய்தி அறிவிப்பவர்களே புதிய ஆத்துமாக்களுக்கு கொடுக்க அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் சீஷர்களாக சபையில் இணைவார்கள். சீஷர்கள் தொகை பெருகும். அல்லது அற்புதம் பெற்று பார்வையாளர்களாக சபைக்கு வந்தவர்களில் அநேகர் சிலகாலத்தில் பின்மாற்றம் அடைந்து வெளியேறுவார்கள். நான் நற்செய்தி மட்டுமே சொல்ல அறிவேன். எனது வேலை, அழைப்பு, சீஷராக்குவது அல்ல என்ற மனநிலை உள்ளவர்களால் இயேசு கிறிஸ்து கொடுத்த பிரதான கட்டளையை முழுமையாக நிறைவேற்ற இயலாது. (மத்.28:19,20). இரட்சிக்கப்படுதலுக்கும் சீஷராவதற்கும் இடையே உள்ள அசாதாரண கால இடைவெளி, சபை சரித்திரத்தில் ஏற்பட்ட வரலாற்றுப் பிழை என்றே கருத வேண்டும்.

ஏனென்றால் இன்று புதிய ஆத்துமாக்கள் சபையில் இணைந்த சிலமாதங்கள் கடந்த பின்பு “சபைக்கல்வி” மூலம் மட்டுமே (Church Education) சீஷத்துவ பாடங்களைக் கற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவு என்னவெனில் சபைகளில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஆனால் சீஷர்களின் எண்ணிக்கையோ குறைவாகவே உள்ளது. இப்படி எதிர்மறையான சூழல் இருப்பினும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமையான சித்திரம்தான் சீஷத்துவம் என்பதை அறிந்துகொண்டால் சீஷத்துவம் என்பது எட்டாத உயரத்தில் இல்லை. சபையார் யாவரையும் சீஷராக்க முடியும் என நம்பலாம். நற்செய்தி ஊழியத்தின்போதே சீஷர்களை உருவாக்கும் நோக்கத்துடன் நற்செய்தியை அறிவிக்க விசுவாசிகளை பழக்குவதும் சீஷர்களின் தொகையைப் பெருகச் செய்திடும்.

## I. இன்றைய சபைகளின் சீஷத்துவ எழுச்சியடைய

1. நற்செய்தி ஊழிய அணுகுமுறையிலேயே மாற்றம் செய்ய வேண்டும்.

- அறிவித்தலோடு முடித்துவிடாமல் இரட்சிப்பிற்குள் நடத்த வேண்டும்.
- இரட்சிப்பிற்குள் நடத்தப்பட்டவர்களுக்கு பின்தொடர்பு பணி அவசியம் செய்ய வேண்டும்.
- அவர்கள் சபைக்கு வந்து சேருமட்டும், அவர்கள் இருப்பிடம் சென்று சந்திக்க வேண்டும்.
- இயேசுவை நம்புவது மட்டுமல்ல, அவருக்கு கீழ்படிவதே சீஷத்துவத்தின் துவக்கம் என்பதை புதியவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

2. நற்செய்தி சொல்பவர்கள், தாங்கள் எத்தனைபேருக்கு சுவிசேஷம் சொல்கிறோம் என்பதில் காட்டும் தீவிரத்தை, சிலருக்காகிலும் விவரித்துக் காண்பிக்கவும் முன்வர வேண்டும் (கலா.2:2).

3. சபைகளில் முதன்முதல் புதியவர்கள் நுழையும்போதே (Walk in) அவர்களின் இரட்சிப்பின் அனுபவத்தை விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

4. தாமதமின்றி சபைகல்வி திட்டத்தின் மூலமோ, பராமரிப்புக் குழுவின் மூலமோ, சிறுகுழுக்கள் முறையிலோ சீஷத்துவப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

5. சபையின் ஒட்டுமொத்த ஆராதனையில் திருப்தி கொள்ளாமல் சபைக்குள்ளேயே ஏற்படுத்தும் சிறுகுழு முறை சிறந்த பலனைத்தரும்.

## II.சபைகளில் காணப்படும் மூன்று வித மக்கள்

சபையிலுள்ள விசுவாசிகளைப் பொதுவாக,

- நம்மூலம் இரட்சிக்கப்பட்டு வந்த விசுவாசிகள் என்றும்.
- பிற சபைகளிலிருந்து இடமாறுதல் பெற்று வந்தவர்கள் என்று மட்டும் பிரித்துப் பார்க்கிறோம்... ஆனால் நமது சபைகளில் மூன்று விதமான மக்கள் இருக்கிறார்கள்.

### 1. ஜென்ம சுபாவத்தார்

- இரட்சிக்கப்பட்டபோதும் மனித இயல்பால் இயக்கப்படுகிற சராசரி மனிதனாக இவர்கள் இருப்பார்கள். (1கொரி.2:14) இன்னும் சிலர் இரட்சிக்கப்படாதவர் களாகக்கூட சபையில் இருப்பர். உங்கள் சபையில், முதல் தலைமுறை கிறிஸ்தவர்களின் (First Generation) பிள்ளைகளில் அநேகர் இரட்சிக்கப்படாதவர் களாக இருப்பார்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்காவிட்டால், அவர்கள் இரட்சிப்பின் அனுபவமின்றி, மதக் கிறிஸ்தவர்களாகவோ சராசரி மனிதராகவோ வளரும் அபாயமுண்டு.
- அநேக பெற்றோர்.... தங்கள் பிள்ளைகள் 13 வயது வரை நல்ல பிள்ளைகளாக Sunday Class-க்கெல்லாம் தவறாமல் வந்தார்கள். ஆனால் இப்போதோ திடீரென்று தவறான நட்பால், சூழ்நிலையால் இப்போது துன்மார்க்கரானார்கள் என்று வேதனைப்படுகிறார்கள். உண்மையென்னவெனில் அவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தை இதுவரை மூளையறிவில் மட்டும் உணர்ந்திருப்பார்கள்.

### 2. ஆவிக்குரிய கிறிஸ்தவர்

இவர்கள் எந்தச் சோதனையிலும் விழாது, கிறிஸ்தவ விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்தவர்கள். அவர்கள் போதகருக்காகவோ, சபையின் கொள்கைக்காகவோ, சபையின் ஊழிய வாய்ப்புக்களுக்காகவோ மட்டும் உங்கள் சபைக்கு வருகிறவர்கள் இல்லை. கிறிஸ்துவை நேசித்து அவருக்காக வாழ கற்றுக்கொள்ளவே உங்கள் சபைக்கு வருகிறார்கள். பரிசுத்த ஆவியின் வழிகாட்டலின்படி நடத்தப்படுகிறவராக இருப்பார்கள் (1கொரி.2:14).

### 3. குழந்தைக் கிறிஸ்தவர்

சபைகள் இவர்களால் நிறைந்திருக்கிறபடியால் கர்த்தருடைய வார்த்தைக்கு இன்று மதிப்பில்லை. கொண்டாட்டங்களில் களிகூறுவார்கள். வசனத்தைக் கேட்கவும், கீழ்ப்படியவும் விரும்பமாட்டார்கள். பொறாமை, பேதங்களுடன் மனுஷமார்க்கமாகவே நடக்கும் மக்கள் தான் குழந்தை கிறிஸ்தவர்கள்.

இப்படி வெவ்வேறு நிலையில் உள்ள விசுவாசிகளுக்கு ஒரே நேரத்தில் ஒரேவித உணவு பரிமாறப்படுவதால்.... வாழ்க்கை மாற்றம் ஏற்படுவதற்கு பதிலாக,

அறிவுமட்டும் பெருத்துப் போகிறது. உபதேச அறிவு, வேத அறிவு இருக்கும் வாழ்க்கை மாற்றம் இராது. இப்பிரச்சனைக்கு ஒரே தீர்வு சீஷத்துவ பயிற்சியை சபைகளில் ஏற்படுத்துவதே ஆகும்.

## III. சபைகளில் சீஷத்துவ பயிற்சி கொடுக்க சிறந்த வழிமுறை

1. சீஷத்துவம் என்பது ஒட்டுமொத்த கிறிஸ்தவ வாழ்க்கை என்னவென்பதைக் குறித்த ஒரு வரைபடமே.
2. விசுவாசம் அல்லது ஜெபம் என்பது போன்ற ஒரு தலைப்பில் மட்டும் போதனை கொடுப்பதால், சில சபைகள் ஏதாகிலும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிறது. ஒட்டுமொத்த கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரதிபலிப்பு குறைந்து காணப்படுகிறது.
3. சீஷத்துவ பயிற்சி என்பது தெரிந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் நடத்தப்படும் பாடமல்ல, ஒட்டுமொத்த கிறிஸ்தவ வாழ்க்கையையும், நம்பிக்கையையும் பிரதிபலிக்கச் செய்யும் பாடங்களாக கற்பிக்கப்பட வேண்டும்.

**இறுதியாக**

இயேசுவின் சீஷர்கள் என்று அழைக்கப்பட்ட அனைவரும் அவரைப் பின்பற்றியவர்கள், அவருக்காக வாழ்ந்தவர்கள். பார்வையாளர்கள் என்று யாரும் இல்லை. மொத்தத்தில் சீஷர்கள்-கர்த்தரைப் பின்பற்றினார்கள். தேவனை விசுவாசிப்பவர்களாகும் மட்டுமல்ல, தேவனுக்கு கீழ்படிகிறவர்களாகவும் மாறினார்கள். (மத்.26:40; அப்.6:4). இயேசு கிறிஸ்து சீஷர்களை உருவாக்க உபகரணங்களை நாடவில்லை. கடவுள் என்ற நிலையிலிருந்து நண்பர் என்ற நிலைக்குமாறி (யோவான் 15:15). அவர்களோடு ஏற்படுத்திய நெருக்கமான உறவால்தான் அவரது சீஷர்கள் உருவானார்கள்.

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**



ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484



# திடப்படுத்திப் பலப்படுத்து

*Encourage him and strength him*


**Rev. I. அலெக்ஸாண்டர்**

விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்


கர்த்தர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கர்த்தர் மோசேக்கு கொடுத்த கடைசி ஊழியம்; நீ யோசுவாவுக்கு கட்டளை கொடுத்து, அவனைத் **திடப்படுத்திப் பலப்படுத்து;** அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகச் கடந்துபோய் அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பான் என்றார். இந்த கடைசி காலத்தில் தேவன் திருச்சபைக்கு தருகிற ஊழியங்களில் ஒன்று "**திடப்படுத்தும் ஊழியம்**" (the ministry of encouragement). தேசம் சுதந்தரிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. இதுவரை ஊழியத்தில் பாடுகள், சோதனைகள், இதன் மத்தியில் அற்புதங்கள் அதிசயங்களைக் கடந்து வந்திருக்கலாம். ஆயினும் திருச்சபையில் இப்போது நடைபெற வேண்டிய முக்கியமான ஊழியம் யோசுவா போன்று பணிவிடைக்காரனாயிருப்பவனை, ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு பிரியாதிருப்பவனை திடப்படுத்த வேண்டும். யோசுவாவைக்குறித்து அனேக காரியங்கள் கூறப்பட்டுள்ளது. அவன் அமலேக்கியரை பட்டயக்கருக்கினால் முறியடித்தான் (யாத்.17:13).

இயேசு தன்னுடைய சிலுவை மரணத்திற்கு முன்... உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் **திடன் கொள்ளுங்கள்:** நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33). 17-ஆம் அதிகாரத்தில் இயேசு இவைகளைச் சொன்ன பின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து பிதாவே வேளை வந்தது..... பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவான் 17:4) என்றார்.

யோவான் 14:12-ல் "மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்த கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்றார். எவ்வளவு பெரிய உற்சாகமான வார்த்தைகள். இவைகளை தேவனுடைய வார்த்தையினால் நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும். (Encourage one another with the word of God).

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய கடைசி நாட்களில் கப்பல் பயணத்தில் "யூரோக்கிலிதோன்" என்றும் கடுங்காற்று மோதியதினால் கப்பல் சேதம் உண்டானபோது இனி தப்பிப் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போனபோது அப்.27:22-ல் **திடமனதாயிருங்களென்று** இப்பொழுது உங்களுக்கு தைரியம் சொல்லுகிறேன் என்று உற்சாகப்படுத்தினான். மேலும் நிருபங்களில் அப்போஸ்தல நடபடிகளில் சீஷர்களுடைய மனதைத் திடப்படுத்தினதைப் பார்க்கிறோம். அப்.14:22-ல் **சீஷருடைய மனதைத்திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி** அவர்களுக்கு புத்திசொல்லி, நாம் அனேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்று வாசிக்கிறோம்.

மோசே, இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலனாகிய பவுல் இவர்களின் இறுதி ஊழியங்களில் உற்சாகப்படுத்தும், திடப்படுத்தும், பலப்படுத்தும் ஊழியத்தை நிறைவேற்றினதைப் பார்க்கிறோம். நாமும் சோர்ந்துபோய், அதைரியமாய், நம்பிக்கையற்ற நிலையில் இருப்பவர்களை உற்சாகப்படுத்தும் ஊழியத்தைச் செய்து தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட இந்த ஊழியத்தை நிறைவேற்றுவோமாக. இந்த ஊழியத்தை செய்ய **விசுவாச வார்த்தைகளை** நாம் பேச வேண்டும்.

நம்முடைய மாம்சக் கண்களினால் பார்ப்பதைப் பேசி ஜனங்கள் இருதயம் கரைந்து போகும்படிச் செய்யாமல் விசுவாச வார்த்தைகளைப் பேசி தேசத்தை சுதந்தரிக்க உற்சாகப்படுத்துவோமாக. உபா.1:28-ல் ....நம்முடைய சகோதரர்... நம்முடைய இருதயத்தை கலங்கப்பண்ணினார்கள் என்று வாசிக்கிறோம். நாம் மற்ற கோத்திர தலைவர்களைப் போல் அல்ல காலேப், யோசுவா போன்று உற்சாகமான வார்த்தைகளை பேசி, ஜனங்கள் இருதயத்தைத் திடப்படுத்துவோமாக.

அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் யூதர்கள் அவனைக் கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள் (அப்.9:23). அவனைக் கொலை செய்யும்படி அவர்கள் இரவும் பகலும் கோட்டை வாசல்களைக் காத்துக் கொண்டிருந்தார்கள். சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து, மதில் வழியாய் இறக்கிவிட்டார்கள். சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷர்களுடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான். அவர்கள் அவனை சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள் (அப். 9:24-26).

ஆனால் இந்த வேளையில் பர்னபா என்பவன் (ஆறுதலின் மகன்) அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரினிடத்தில் அழைத்துக்கொண்டு போய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டதையும், அவர் அவனுடனே பேசினதையும் தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்குவரத்துமாயிருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தைரியமாய் பிரசங்கித்தான் ''அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு. அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்ட விதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து; கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலைசெய்ய எத்தனம் பண்ணினார்கள். சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துக்கொண்டுபோய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள். அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின " (அப்.9:27-31).

இன்று பர்னபாவைப் போல உள்ளம் கொண்டவர்கள் எழும்பி, இந்த ஆறுதலின் ஊழியத்தை, திடப்படுத்தும் ஊழியத்தை, செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சபைகளில், ஸ்தாபனங்களில் இன்று ஆறுதலற்றுக் கிடக்கும் விசுவாசிகள், ஊழியர்கள் அநேகர். கர்த்தர் இந்த கடைசி காலத்தில் திடப்படுத்தும் ஊழியத்தையும், உற்சாகப்படுத்தும் ஊழியத்தையும் (ministry of encouragement) நிறைவேற்ற உதவி செய்வாராக.



# சம்பாதிக்க வேலை

**Rev. R. நெல்சன் ஞானகுமார்**
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.

"ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்" (1 தெச. 3:10–12).

பொருளாதாரத்தில் நாம் ஆசீர்வாதமாயிருப்பதற்கு ஆண்டவர் பல காரியங்களை நமக்குக் கொடுக்கிறார். அதில் ஒன்று தான் நமக்கு ஆண்டவர் கொடுத்திருக்கிற வேலையாகும். எனவே ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த வேலையை எப்படி செய்ய வேண்டும் என்பதைக் குறித்து வேதம் போதிப்பதை பார்க்கலாம்.

**1. கடினமாய் வேலை செய்யுங்கள்** (நீதி.10:4; 6:9-14;21;25)

ஆண்டவர் உங்களுக்கு நல்ல சரீரத்தையும் கொடுத்து, வேலையையும் கொடுத்திருக்கிறார். உங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரத்தை வீணடிக்காமல் கடினமாய் வேலை செய்யுங்கள். தக்க பலனைப் பெறுவீர்கள். ஒரு நாளைக்கு அதிக பட்சம் 8 மணி நேரம் தூங்குங்கள். மீதமுள்ள நேரங்களில் திட்டமிட்டு வேலை செய்யுங்கள். நேரத்தை செலவு செய்யாதிருங்கள். முதலீடு செய்யுங்கள். (Don't just spend your time but invest your time).

இங்கிலாந்து தேசத்தை அசைத்த ஜான் வெஸ்லி 40 வருடங்களாக சராசரியாக தினமும் 250 மைல்கள் பயணம் செய்வாராம். தன் வாழ்நாளில் 40,000 பிரசங்கங்களை செய்திருக்கிறார். 400 புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவருக்கு 10 மொழிகள் தெரியுமாம். தனது 83 வது வயதிலே தினமும் 15 மணி நேரத்திற்கு மேல் உட்கார்ந்து எழுத முடியவில்லையே என வருத்தப்பட்டார். தனது 86வது வயதிலே தினமும் இரண்டு பிரசங்கத்திற்கு மேல் பிரசங்கம் பண்ண முடியவில்லையே என வெட்கப்பட்டார். அதுமட்டுமல்ல இந்த வயதிலே காலை 5:30 மணிக்கு முன்பு எழுந்திருக்க முடியவில்லையே என வருத்தப்பட்டார். இங்கிலாந்து தேசத்தின் சரித்திரத்தை எழுதினால் ஜான் வெஸ்லி பெயர் இல்லாமல் எழுத முடியாதாம். அந்தளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

**2. அளவுக்கதிகமாய் வேலை செய்யாதிருங்கள்** (யாத். 34:21)

கடின வேலை என்பது ஏதாவது ஒரு வேலையை ஓயாமல் செய்து கொண்டிருப்பதல்ல.. வாழ்க்கையில் எல்லா காரியங்களுக்கும் போதுமான அளவு நேரம் கொடுக்க வேண்டும். சிலர் ஓயாமல் வேலை செய்து சரீரத்தைக் கெடுத்துக் கொள்வார்கள். சரீரத்திற்கு சிறிது ஓய்வு கொடுப்பது, அடுத்து செய்ய இருக்கும் வேலைக்கு தேவையான பெலனை ரீசார்ஜ் செய்வதாகும். போதுமான அளவு தூங்குவது மன அழுத்ததை குறைக்கும். இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக்கொள்ளும். இருதய சம்பந்தப்பட்ட வியாதி வருவதற்கான வாய்ப்புகள் குறையும்.

சிலர் தனி ஜெபம், குடும்ப ஜெபம், வேத வாசிப்பு, குடும்பத்தோடு நேரம் செலவிடுதல், ஞாயிறு ஆராதனை போன்ற அவசியமான காரியங்களுக்கு நேரம் இல்லாத

அளவுக்கு கடினமாய் வேலை செய்வார்கள். கடைசியில் எல்லாவற்றையும் இழந்து, ஆண்டவரோடுள்ள உறவையும் இழந்து விடுவார்கள்.

"ஒரு மனிதன் தன் வாழ்நாளின் முதல் பாதியை தன் சுகத்தைக் கெடுத்து பணம் சம்பாதிக்கிறான், இரண்டாம் பாதியில் சம்பாதித்ததை செலவு செய்து கெட்டுப்போன சுகத்தை பெற முயற்சிக்கிறான்" ஆனால் உண்மை என்னவென்றால் பணம் முழுவதும் செலவுழியுமே தவிர வியாதி சுகமாகாது.

**3. சந்தோஷமாய் வேலை செய்யுங்கள்** (நெகே. 2:1).

நீங்கள் எதை சந்தோஷமாய் செய்கிறீர்களோ அதை நன்றாய் செய்வீர்கள். சிறிய வேலையோ. பெரிய வேலையோ, முக்கியத்துவம் வாய்ந்த வேலையோ அல்லது முக்கியத்துவம் அற்ற வேலையோ, உங்கள் படிப்புக்கு ஏற்ற வேலையோ அல்லது தாழ்ந்த வேலையோ எதுவானாலும் அது உங்களுக்கு ஆண்டவர் கொடுத்த வேலை. எனவே, வேலையை நொந்து கொள்ளாமல் முறுமுறுப்பில்லாமல் சந்தோஷமாய் செய்யுங்கள்.

"Success is not the key to happiness; happiness is the key to success. If you love what you are doing, you will be success".

"நீங்கள் விரும்பினது உங்களுக்கு கிடைக்காமலிருக்கலாம்; ஆனால் உங்களுக்கு கிடைத்ததை விரும்பிப் பழக வேண்டும்" "You may not have what you love; but you must love what you have:

**4. உண்மையாய் வேலை செய்யுங்கள்**
(தானி. 6:4; சங்கீதம் 78:22; நீதி. 28:20; மத். 25:21).

நீங்கள் செய்யும் வேலையில் உண்மையாயிருங்கள். குறித்த நேரம் வரை வேலை செய்யுங்கள். குறித்த வேலைகளை செய்யுங்கள். வேலை செய்யும் ஸ்தலத்திலுள்ளவைகளை திருடாதிருங்கள். உங்களை யாரும் கண்காணிக் கிறார்களோ இல்லையோ ஆண்டவர் உங்களை பார்த்துக்கொண்டேயிருக்கிறார். எனக்குத் தெரிந்த ஒருவர் தனது அலுவலகத்திற்கு சொந்தமான ஒரு வெள்ளை தாளை எடுத்து வந்ததற்காக மனச்சாட்சியில் வாதிக்கப்பட்டு பாவ அறிக்கை செய்தார். இன்னொருவர் தனது அலுவலகத்திலுள்ளதையெல்லாம் தனது வீட்டுக்கு கொண்டு வந்த பிற்பாடும் அதை நியாயப்படுத்தி பேசுகிறாரே தவிர வருத்தப்படவில்லை.

உங்களோடு கூட வேலை செய்கிறவர்கள் உண்மையில்லாமலிருக்கலாம். ஆனால் நீங்கள் அவர்களை பின்பற்றாதிருங்கள். உங்கள் உண்மைக்குத் தக்க சம்பளம், பாராட்டு, வெகுமதி, பதவி உயர்வு உங்களுக்கு கிடைக்காமலிருக்கலாம். ஆனாலும் உண்மையாயிருங்கள், உங்களுக்கு உயர்வு ஆண்டவரிடத்திலிருந்து வரும்.

லஞ்சம் வாங்காதிருங்கள். "நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக, முகதாட்சிணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக. பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும்" (உபா.16:19).

**5. நேர்த்தியாய் வேலை செய்யுங்கள்** (பிரசங்கி 9:10).

"தாவீது சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும்போய், புத்தியாய்க் காரியத்தை நடப்பித்ததினால், சவுல் அவனை யுத்தமனுஷரின்மேல் அதிகாரியாக்கினான். அவன் எல்லா ஜனத்தின் கண்களுக்கும், சவுலுடைய ஊழியக்காரரின் கண்களுக்கும்கூடப் பிரியமாயிருந்தான்".

உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலை எதுவானாலும் அதை நேர்த்தியாய், சிறப்பாய் செய்யுங்கள், அரைகுறையாய் செய்யாதிருங்கள், முழு மனதாய் செய்யுங்கள். உங்களை நம்பி ஒரு வேலை கொடுக்கப்பட்டுவிட்டால், அதைக்குறித்து உங்கள் எஜமான் இனி கவலைப்பட வேண்டாம் என்ற நிலை வரவேண்டும். அதாவது உங்களைக் குறித்த நம்பகத்தன்மை வரவேண்டும். வேலை செய்யும் முன் ஆண்டவரிடம் அதற்கான ஞானத்தைக் கேளுங்கள்.

“சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்” (யாத்.31:5).

**6. யாவரோடும் சமாதானமாய் வேலை செய்யுங்கள்** (எபி.12:4)

உங்களோடு வேலை செய்கிறவர்களோடுள்ள உறவு முக்கியம். அவர்களை நம்பி உங்கள் வாழ்க்கை இல்லை என்றாலும், அவர்களை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்துவதற்காகவாகிலும் அவர்களோடு உங்களுக்கு நல்ல உறவு இருக்க வேண்டும்.

உடைந்து போகக்கூடிய பொருட்களை அனுப்பும்போது அதை கவனமாய் கையாள வேண்டும் என்பதற்காக அதன் பெட்டியில் "FRAGILE. HANDLE WITH CARE" என்று எழுதியிருப்பார்கள். அதுபோல உங்களோடு வேலை செய்யும் ஒவ்வொருவர் கழுத்திலும் "PEOPLE!! HANDLE WITH CARE" என்று வாசகம் எழுதப்பட்ட அட்டை ஒன்று தொங்க விடப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள்.

**உங்களோடு வேலை செய்பவர்களோடுள்ள உறவை வலுப்படுத்த...**

- அவர்களை சந்திக்கும்போது சிரித்த முகத்தோடு இருங்கள்.
- அவர்களை விசாரியுங்கள்.
- அவர்களுக்கு முடிந்த உதவி செய்யுங்கள்.
- அவர்கள் அழைக்கும் குடும்ப விழாக்களுக்கு செல்லுங்கள்.
- தேவைகளை கேட்டு உங்களுக்காக ஜெபிக்கிறேன் என்று சொல்லுங்கள்.
- அவர்களுக்கு உரிய மரியாதையை கொடுத்து விடுங்கள்.
- அவர்கள் பிறந்த நாள் மற்றும் திருமண நாளை அறிந்து வாழ்த்துக் கூறுங்கள்.

**7.அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படிந்து வேலை செய்யுங்கள்**

“எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்” (ரோமர் 13:1,2; எபேசியர் 6:5; 1 பேதுரு 2:14,15,18-20).

**8. பரிசுத்தமாய் வேலை செய்யுங்கள்**

நீங்கள் வேலை செய்யுமிடத்தில் பாவம் செய்வதற்கான சோதனை வரலாம். வேலையே போனாலும் பரவாயில்லை பாவஞ்செய்ய உடன்படக்கூடாது.

- ஆண் பிள்ளைகளை கொலைசெய்ய ராஜா கட்டளையிட்டபோது எபிரெய மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்து ராஜாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியவில்லை (யாத்.1:16,17,21).

- தானியேல் போஜனத்தினால் தீட்டுப்படாதபடி தன்னைக் காத்துக் கொண்டான் (தானி.1:8).

- அதிகாரியின் மனைவி யோசேப்பிடம் தவறாக நடக்க முற்பட்டபோது, யோசேப்பு விலகியோடினான் (ஆதி.39:11,12),

நீங்கள் வேலை செய்கிற இடத்தில் சந்திக்கும் சோதனை என்ன என்பதை அறிந்து விழிப்போடியிருங்கள்.

‘‘ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்” (1கொரி.10:31).

# உங்களைப் பற்றிய சாட்சி என்ன?

**ஆபிரகாம் :** தேவனுக்கு பயப்படுகிறவன் (ஆதி.22:12). தேவனுடைய சிநேகிதன் (ஏசாயா 41:8). விசுவாசிகளின் தகப்பன் (ரோமர் 4:12).

**மோசே :** பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவன் (எண்.12:3) தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண்.12:7).

**யோபு :** உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1:1).

**எலியா :** பரிசுத்தவான் (2 இராஜா 4:9), தேவனுடைய மனுஷன் (1 இராஜா 17:24), கருத்தாய் ஜெபிக்கிறவன் (யாக்.5:17).

**எஸ்றா :** தேறின வேதபாரகன். இருதயத்தை பக்குவப்படுத்தியவன் (எஸ்றா 7:10,11).

**தாவீது :** இருதயத்திற்கு ஏற்றவன் (1 சாமு.13:14; 16:7).

**சாமுவேல் :** கர்த்தர் சவுலை ராஜாவாக்கியதற்கு மனஸ்தாபப்பட்டபோது, அதை நினைத்து சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். அவர் அநியாயம் செய்யவும் இல்லை. இடுக்கண் செய்யவுமில்லை; பரிதானம் வாங்கவும் இல்லை (1 சாமுவேல் 15:11; 12:1-4).

**மரியாள் :** தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டவள் (லூக்கா 10:38-42).

**நாத்தான்வேல் :** கபடமற்ற உத்தம இஸ்ரவேலன் (யோவான் 1:47).

**அப்பொல்லோ :** வேதாகமத்தில் வல்லவன், ஆவியில் அனலுள்ளவன், தைரியமாய் போதிக்கிறவன். சாதுரியவான் (அப். 17:24,25).

**அனனியா :** வேத பிரமாணத்தின்படி பக்தியுள்ளவன், நல்லவன் (அப்.22:12).

**தீமோத்தேயு :** மாயமற்ற விசுவாசத்தை உடையவன் (2 தீமோ.1:4,5).

**தேமேத்திரியு :** எல்லாராலும் நற்சாட்சி பெற்றவன் (3 யோவான் 1:12).

**காயு :** சத்தியத்தில் நடப்பவன், அன்புள்ளவன், உண்மையுள்ளவன் (3 யோ.1:1-6).

**எப்பாப்பிரா :** போராடி ஜெபிக்கிறவர் (கொலோ.4:12).

**தீகிக்கு :** உண்மையுள்ள ஊழியன் (கொலோ.4:7; எபே.6:21).

**எப்பாப்பிராதீத்து :** கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் தன் பிராணனையும் எண்ணாதவர் (பிலி.2:25-30).

**யோவான் :** அன்பாயிருந்த சீஷன் (யோவான் 21:20).

**ஆக்கில்லா-பிரிஸ்கில்லா :** கழுத்தைக் கொடுத்தவர்கள் (ரோமர் 16:3-5).

**சகரியா - எலிசபெத்து:**கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியும், நியமங்களின் படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களா யிருந்தார்கள் (லூக்கா 1:5,6).

**ஏனோக்கு :** தேவனுக்கு பிரியமானவன் (எபி.11:5).

**பர்னபா :** அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான் (அப்.11:24).

“நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே வந்து உன் எஜமானனுடைய சந்தோஷத்தில் மகிழ்ந்திரு” என்ற வார்த்தைகளுக்கு தகுதியாய் வாழ்வோம். சாட்சியைக் காத்துக்கொள்வோம்!.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய்... வாங்க... வாங்க... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? காலாண்டு எக்ஸாம் நெருங்கிடுச்சு... உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்களும் ஜெபத்தோடும் மகிழ்ச்சியோடும் சூப்பரா எக்ஸாம் எழுதுங்க... ஓக்கே... இன்றைக்கு ஒரு சூப்பரான கதை சொல்ல போறேன். கவனமா கேட்கணும் சரியா? வாங்க கதைக்கு போகலாம்...

ஒரு மனிதனுக்கு மீன்கள் வளர்ப்பதில் அதிக ஆர்வம். தனது வீட்டு வாசலிலேயே பெரிய தொட்டி ஒன்றைக் கட்டி அதில் ஏராளமான மீன்களை வளர்த்து வந்தான். மீன்களுக்கு சரியான நேரத்தில் உணவு கொடுப்பது, அவ்வப்போது தண்ணீரை சுத்திகரிப்பது. தேவைக்கேற்ப மருந்துகள் தருவது, மீன்கள் நன்றாக வளர்ந்து பெருகுவதற்கேற்ற சூழ்நிலையை எப்போதும் கவனித்துக் கொள்வது என்று எல்லா வகையிலும் கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தான். மாதம் ஒரு முறை அதை வந்து பரிசோதிக்க ஒரு மருத்துவரையும் ஏற்பாடு செய்திருந்தான். மீன்களும் நன்றாக வளர்ந்து பெருகின.

ஒரு நாள் அவன் பதற்றமாக மருத்துவரிடம் ஓடி வந்தான். ஐயா, ஓரிரு நாட்களாக மீன் தொட்டியில் மீன்களின் அசைவையே காணவில்லை. சில மீன்கள் காணாமல் போயிடுச்சு... கொஞ்சம் வீட்டுக்கு வர முடியுமா டாக்டர்? என்றான். மருத்துவருக்கு ஒரே வியப்பு. இத்தனை கவனமாக இருக்கின்ற ஒரு இடத்தில் இப்படியெல்லாம் நிகழ வாய்ப்பே இல்லையே... மீன்கள் ஏதேனும் வெளியே துள்ளி கிடக்கின்றனவா? என்று மருத்துவர் கேட்டார். இல்லை டாக்டர்.... நன்றாக பார்த்து விட்டேன். வெளியே விழ வாய்ப்பே இல்லை. அப்படியானால்... யாரேனும் திருடியிருப்பார்களோ? காவலுக்கு நாய்கள் இருக்கே டாக்டர். இதைப்போய் திருட இவ்வளவு ரிஸ்க் எடுப்பார்களா? அதுவும் சரிதான் என தலையை அசைத்துக்கொண்டே டாக்டர் கேட்டார்... தினமும் சரியான நேரத்தில் சரியான அளவில் தீனி போட்டீர்களா? தவறாமல் போட்டேனே... தண்ணீரெல்லாம் மாற்றினீர்களா? அதற்கென்றே தனி வேலையாட்கள் வைத்திருக்கிறேனே. அப்படியானால் மருந்துகளெல்லாம் சரியாக கலந்தீர்களா? போனவாரம் வரை நீங்கள் தானே வந்து கலந்தீர்கள் டாக்டர்...

மருத்துவருக்கு ஒரே குழப்பம். எல்லாமே சரியாதான் செஞ்சிருக்கீங்க...! அப்புறம் எப்படி இப்படி நடக்கும்...? சரி, எனக்குத் தெரியாமல் வேற ஏதாவது மீனை வாங்கி தொட்டியில் விட்டீர்களா...? என்று கேட்க, அவனது முகத்தில் ஒரு வெளிச்சம் வந்தது. ஒருவேளை போனவாரம் நான் தொட்டியில் விட்ட சின்ன முதலைதான் எல்லாத்துக்கும் காரணமாக இருக்கலாமோ என்று சிந்தித்தவாரே மருத்துவரிடம் கூற... மருத்துவர் தலையில் அடித்துக்கொண்டே அதுதான் காரணம் என கூறி அவனை திட்டித் தீர்த்தார்.

அருமை தம்பி தங்காய் நம்மில் பலரும் புலம்புவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்... வாரந்தோறும் ஆலயத்திற்கு வருகிறோம். சிறுவர் வகுப்புகளில் தவறாமல் பங்கு பெறுகிறோம். பல வசனங்களை மனனம் செய்கிறோம். விடுப்பு எடுக்காமல், காலம் தவறாமல் பள்ளிக்கூடங்களுக்கு செல்கிறோம். எல்லாமே

நல்லதுதான். ஆயினும் எதிர்பார்க்கிற ஆசீர்வாதம். நல்ல மதிப்பெண்கள் இல்லையே.... காரணமென்ன?

சில நேரங்களில் இவர்களால் நமக்கு பிரச்சனையில்லை என்று நீங்கள் சேர்த்துக்கொண்ட சில தீய நண்பர்கள் தான் உங்கள் ஆசீர்வாதங்களுக்கு தடையாக மாறிவிடுகிறார்கள். நீங்கள் கேட்கலாம்.... அவர்களை போல நான் கெட்ட வார்த்தையெல்லாம் நான் பேசுவது இல்லையே... உண்மைதான். ஆனால் அவர்கள் பேசுவதை நீங்கள் கேட்கும்போதே உங்களை அறியாமல் உங்களது சிந்தையை அது கறைப்படுத்திவிடுகிறது. ‘‘பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்’’(பிரசங்கி 9:18) என வேதம் கூறுகிறது.

நம்முடைய தொட்டியில் ஏதாவது முதலை இருக்கிறதா...? கொஞ்சம் திங்க் பண்ணுங்க. அழகான வாழ்க்கை பாழாய் போய்விடுமல்லவா? சரி... எனக்கு டைம் ஆயிடுச்சு.... உங்க கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புங்க... அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்கிறேன்... Byee.

---

## மிஷன் கன்வென்ஷன்கள் மற்றும் பிரயாணங்கள்












# DEAR MOSES ! IS YOUR JOSHUA READY?

## அன்பான மோசேயே ! உன் யோசுவா ஆயத்தமா?

Rev. லின்ஸி ஜோன்ஸ் (President, CA)

ஜான் மேக்ஸ்வெல் என்ற தேவ ஊழியர், "தலைவர்கள் மாபெரும் தலைவர்களாய் உருவாவது அவர்களின் அதிகாரத்தின் வளர்ச்சியால் அல்ல, மாறாக பிறருக்குள் மறைந்திருக்கும் தலைமைத்துவத்தைக் கண்டுபிடித்து அவர்களை அதிகாரப்படுத்துவதாலேயே" என்று கூறுகிறார். "Leaders become great not because of their power but because of their ability to empower others".

மேற்கூறிய கூற்று எத்தனை உண்மை பிரியமானவர்களே!! இன்றைய கிறிஸ்தவ உலகம் மட்டுமல்லாது, வெளி உலகமும், அரசியலும் சந்திக்கும் மிகப்பெரிய பிரச்சனை அடுத்த தலைமுறை தலைவர்கள் இல்லை என்பதேயாகும். ஏன் இந்த அவல நிலை என்றால், நாம் அதிகாரத்தை பயன்படுத்துகிறோமே தவிர, அதிகாரத்தை கொடுத்து சரியான அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்கத் தவறினதினால்தான்!!

யாத் 17:8-10; வசனங்களின்படி, "அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்து கொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என்கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம்பண்ணினான்"...

இந்த வேத பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் நாம் அனைவரும் அறிந்ததே! "ஓரேப்" என்ற இடத்தில் தண்ணீருக்காக கர்த்தரை நோக்கி மோசே கேட்டபொழுது கர்த்தர் பாறையிலிருந்து தண்ணீர் வரும்படி ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார்.அந்த அற்புதம் நிகழ்ந்த பிறகு, நாம் உடனடியாக ஒரு யுத்தத்தைப் பார்க்கிறோம்.

இந்த குறிப்பிட்ட இதழில், இப்பகுதியில் நாம் பார்க்கும் மூன்று வார்த்தைகளையும் அதின் அர்த்தங்களையும் நம் சிந்தனையின் தலைப்பின் அடிப்படையில் புரிந்து கொள்ள ஆண்டவர் உதவி செய்வாராக.

### 1. ஓரேப்: Horeb

இந்த வார்த்தையின் அர்த்தம் "வனாந்திரம்" அல்லது "வறண்டிருக்கும்/ விளைச்சலற்ற/ வெறுமையான/ பாழாய்போன இடம்" என்பதாகும். தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கன்மலை/ பாறையிலிருந்து தண்ணீரை வரவழைத்த இடம் ஓர் வறண்ட இடமாகும். நாம் ஆராதிக்கும், சேவிக்கும் ஆண்டவர் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதை இதைவிட எளிதாக விளக்க இயலாது. நாம் அவரைச் சார்ந்திருக்கும் போது, அற்புதம் நடக்க வாய்ப்பே இல்லாத வறண்ட நிலத்திலும், அதுவும் அற்புதம் பெற்றுக்கொள்ள வாய்ப்பே இல்லாத பாறை போன்ற கடினமான சூழ்நிலையிலும் நம் தேவனால் அசாத்தியமான காரியத்தை செய்து நம் சூழ்நிலையை அவர் நாமம் விளங்கும் சந்தர்ப்பமாக மாற்ற அவரால் இயலும்.

### 2. ரெவிதீம் : Rephidim

இந்த வார்த்தையின் அர்த்தம் "இளைப்பாறுதல்" அல்லது "இளைப்பாறும் இடம்" என்பதாகும். பல நூற்றாண்டுகளின் சரித்திரங்களும், சம்பவங்களும் நிர்ணயிக்கப்படும்

இடமாக இந்த இடம் காணப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிரான மிகப்பெரிய யுத்தம் நடைபெற்ற இடம் இந்த **ரெவிதீம்** ஆகும். **ஓரேப்** என்ற இடத்தின் பெயருக்கும், அங்கு காணப்பட்ட சூழ்நிலைக்கும் ஓரளவாவது தொடர்பைக் காணமுடியும். காரணம் வறட்சியான இடத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் "**ரெவிதீமிலோ**" அதின் பெயருக்கு முற்றிலும் எதிர்மறையாக இளைப்பாறுதலுக்கு பதிலாக யுத்தம் ஏற்படுகிறது. அநேக நேரங்களில் நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்பங்களிலும், ஊழியங்களிலும் இளைப்பாறும் சமயத்தில் பெரும் யுத்தத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுவிட கூடும். கவனம்!!

### 3. அமலேக்கு : Amalek

இந்த பெயருக்கு அர்த்தம் "தேவனுக்கு விரோதமானவன்/ நக்கிப்போடுகிறவன்/ எல்லாவற்றையும் நாசமாக்குகிறவன்." எத்தனை உண்மை! தேவன் நமக்கு கொடுக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் நக்கிப்போடுகிற/ நாசமாக்குகிற ஒரு எதிரி உண்டு. இந்த எதிரி (அமலேக்கு) பெரும்பாலும் நாம் எதிர்பாராமலிருக்கிற அல்லது நாம் இளைப்பாறுகிற (ரெவிதீம்) இடத்தில், நமக்கு தேவன் சாத்தியமே இல்லாத வறண்ட (ஓரேப்) இடத்தில் தந்த அத்தனை மேன்மையான ஆசீர்வாதங்களையும் (கன்மலையின் தண்ணீர்) அனுபவிக்க விடாமல் நாசமாக்க முடியும்.

ஆனால், இதை தடுக்க வேண்டுமானால் நமக்கு ஒரு யோசுவா(வாலிபன்) தேவை. மோசே தேவசமூகத்தில் (மலையின் மேல்) நிற்க வேண்டுமானால், பள்ளத்தாக்கில் போராட ஒரு யோசுவா (வாலிபன்) நிச்சயம் தேவை. மோசேயைப் போன்ற இன்றைய சபைத்தலைவர்கள் "ஓரேப்" (வறண்ட இடம்) ல் நடந்த அற்புதத்தில் அல்லது நம் வாழ்வில், ஊழியத்தில் தேவன் செய்த அற்புதத்தில் தங்கி அதை அனுபவிப்பதில் கவனம் செலுத்தாமல், மோசே செய்ததைப் போல (அற்புதத்தை பெற்றுக்கொண்ட நேரத்தில் இளைப்பாறாமல், இளைப்பாறும் நேரத்தில் வரும் யுத்தத்திற்காக யோசுவாவை ஆயத்தப்படுத்தினான்) நம் கையில் கர்த்தர் தந்திருக்கும் திரள் கூட்டத்திலிருந்து, ஒரு யோசுவாவையாவது கண்டுபிடிப்போமானால், ரெவிதீமிலே ஒரு பெரிய வெற்றியை கர்த்தர் நமக்கு வைத்திருக்கிறார்.

ஆறு இலட்சம் பேர் உள்ள ஒரு கூட்டத்தில் யோசுவா என்கிற வாலிபன் யுத்தத்தை தலைமை தாங்கும்படி ரெவிதீமிற்கு வரும் முன்னதாகவே மோசேயால் கண்டுபிடிக்கப்பட்டான்.

**நம் நிலை என்ன? கண்டுபிடிக்க சில கேள்விகள்:**

1. ஓரேபிலே திருப்தியடைந்து தங்கியிருப்பவனா?
   Am I satisfied and resting on Horeb?
2. என்னுடைய தற்காலிக நிலையைக் குறித்து மட்டும் கரிசனையுள்ளவனா?
   Am I concerned only about my present situation?
3. நான் யோசுவாவைக் கண்டுபிடிக்க ஏதேனும் ஒரு விதத்தில் முயற்சிக்கிறேனா?
   Am I taking any efforts to identify Joshua?
4. வரப்போகும் ரெவிதீமைக் குறித்த கரிசனை எனக்கு உண்டா?
   Am I concerned about Rephidim?
5. நான் மலையுச்சிக்கு போகும் முன்னதாக யுத்தத்தை பொறுப்பெடுத்துக்கொள்ள யோசுவாவை ஆயத்தம் செய்கிறேனா?
   Before I could go to the mountain top, have I prepared a Joshua to take care of the battle?

மேற்கண்ட கேள்விகளின் பதிலோடு காத்திருங்கள்! அடுத்த இதழில் "யோசுவா"வைத் தெரிந்தெடுப்பதில் உள்ள அடையாளங்களோடு உங்களைச் சந்திக்கிறேன்.

**உங்கள் சிந்தனைக்கு :**

"யோசுவாக்கள், மோசேக்களால் ரெவிதீமிலல்ல மாறாக, ஓரேப்புகளிலே கண்டெடுக்கப்படுகிறார்கள்"





ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!!

**SIAG PASTORS CONFERENCE 2019**

செப்டம்பர் 24-26



# பெற்றோர்களே!

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை தமிழ்ப் பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற Bible Champions-ல் பங்குபெற இப்பொழுதிலிருந்தே பிள்ளைகளை ஆயத்தப்படுத்த நினைப்பூட்டுகிறேன். நமது சபைகளில் ஞாயிறு பள்ளியின் மூன்றாம் காலாண்டுக்குரிய பாடங்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் எல்லா பாடப்புத்தகங்களையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வெளியிடவும், பணிகள் முனைப்புடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களுக்கான (Students' Work Book) அச்சடிப்பு பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்விதமாக நமது AGCM ஊழியங்கள் தேவ கிருபையாலும், உங்கள் ஜெபத்தாலும், ஒத்துழைப்பாலும் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து இவ்வூழியங்களுக்காக ஜெபியுங்கள்.

இந்த இதழிலும், ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்று பிர 3: 1-ல் கூறப்பட்டுள்ளபடியே, எவ்வாறு பெற்றோர்கள் ஒவ்வொரு காலத்திலும் பிள்ளைகளிடம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் சற்று தியானிப்போம். சிறு பிள்ளை பிறந்தபோது நாம் அன்புடன் எவ்வாறு கொஞ்சி, தாலாட்டி இருந்தோமோ அதே போன்று நாம் அவர்கள் பதின்ம வயதிற்குள் (Teenage) பிரவேசிக்கும் போது இருக்கலாகாது.

எவ்வாறு கால சூழ்நிலைகள் (Seasons) அவ்வப்போது மாறுகின்றதோ, அவ்வாறு நாமும் காலத்திற்கேற்றவாறு மாறிக் கொள்ள வேண்டும். ஒரே காலமாயிருந்தால் நாம் உயிர் வாழுவதற்கேற்ற சூழல் நமக்கு உண்டாகாது. அதே போன்று பிள்ளைகளுடைய வளர்ச்சிக்கேற்றவாறு நாமும் மாறிக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்களுடைய இந்த மாற்றங்களை நாம் 4 வகைகளாக பிரிக்கலாம்.

### 1. வேலைக்காரராய் இருங்கள் (வயது 0-2) Be a Servant

பெற்றோர்கள் தங்களுடைய 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் வேலைக்காரர்களைப் போன்று நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் பிறந்ததிலிருந்து அவர்களுக்கு தேவையான அனைத்து பணிவிடைகளையும் செய்வது நமது கடமை. அவர்களிடமிருந்து நாம் எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாத காலக்கட்டம் இது. அவர்கள் விரும்புவதை எல்லாம் செய்வது, பாடுவது, ஆடுவது, விளையாடுவது என்று அவர்கள் விருப்பத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் காலக்கட்டமிது. குழந்தைகள் எஜமான்கள் போலவும், நாம் வேலைக்காரர்களைப் போலவும் அவர்கள் கொடுக்கும் கட்டளைகளை எல்லாம் நாம் நிறைவேற்றுகிறோம்.

### 2. ஆசிரியராய் இருங்கள் (வயது 3-12) Be a Teacher

பெற்றோர்கள் இந்த காலக்கட்டத்தில் ஒரு ஆசிரியரைப் போன்று மிக கவனத்துடன் அவர்களிடம் அதிகாரம் செலுத்தி, கட்டளையிட்டு அவர்களுடைய

பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்படுத்தும் பருவம். நன்மை, தீமையை கற்றுக் கொடுக்கும் காலம் இது. இந்த காலக்கட்டத்தில் நாம் என்னென்ன மாற்றங்களை பிள்ளைகளிடத்தில் உருவாக்க வேண்டுமோ, அதை அதிகாரத்தை செலுத்தி, சற்று கடினமாய் நடத்தியாகிலும் உருவாக்கி விட வேண்டும். பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (நீதி 22 :6) சிறு சிறு வேலைகள் அவர்களுக்குரியதை அவர்களே செய்ய பழக்குங்கள்.

### 3. ஆலோசகராய் இருங்கள் (வயது 13-18) Be a Counsellor

இந்த டீன்ஏஜ் பருவத்தில் பிள்ளைகள் அநேக தடுமாற்றங்களுக்குள் காணப்படுவார்கள். எனவே பெற்றோர்கள் நல் ஆலோசகர்களாய் இருந்து, அவர்கள் தவறான காரியங்களை தேர்ந்தெடுக்காத வண்ணம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாம் ஆலோசனைகளைக் கொடுக்காதபட்சத்தில் அவர்கள் பிறரின் ஆலோசனைகளுக்கு செவி சாய்த்து அழிவுக்கு நேராய் செல்ல நேரிடும். மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் (கலா 6:7) என்ற காரியங்களை வேதத்திலிருந்து கற்றுக்கொடுங்கள். வேதத்தில் தவறான காரியங்களை தெரிந்தெடுத்தவர்களின் முடிவு என்னவானது? ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? போன்றவைகளை அவர்களுடன் பேசுங்கள்.

### 4. நண்பராய் இருங்கள் (வயது 18+) Be a Friend

'தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் தோழன்' என்பது போல இப்போது அவர்கள் சிறுவர்கள் அல்ல. அவர்கள் பெரியவர்களாய் ஆகிவிட்டார்கள். அரசாங்கமே 18 வயது நிரம்பியவர்களை முழு மனிதனாக கணக்கில் கொள்கிறது. நாம் அவர்களை இவ்வளவு நாட்களும் எவ்வாறு உருவாக்கினோம் என்பதின் ரிசல்டை இந்தப் பருவத்தில் பார்க்க முடியும். இந்த நண்பர்களைப் போன்று பழகும் உறவு அவர்கள் வாழ்நாள் முழுவதுக்குமான உறவு. இவ்வாறு வேதம் காட்டும் வழியில் நடக்க அவர்களை நாம் பழக்குவித்துவிட்டால், அவர்கள் ஞானவான்களாகி, வாழ்நாள் முழுவதும் ஆசீர்வாதமாய் காணப்படுவார்கள்.

கர்த்தர் தாமே நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---


## ஆண்கள் ஐக்கிய 10-வது மாநில முகாம்

நாள் : அக்டோபர் 1, செவ்வாய்கிழமை மாலை 4 மணி முதல்
அக்டோபர் 2, புதன்கிழமை மாலை 4 மணி வரை

இடம் : ஏ.ஜி. கேம்ப் சைட், மதுரை

கருப்பொருள்
"திடன்கொள்"
1 கொரி. 16:13

தேவ செய்தியாளர்கள்

**சங்கை. A.ஆபிரகாம் தாமஸ்**

**சுவி. ஃப்ரட்டி ஜோசப்**

# அன்பு என்னும் உன்னத பண்பு

**தேவ அன்பாகிய உன்னத பண்பில் எவ்வளவு வளர்ந்திருக்கிறீர்கள் என்று உங்களை சோதித்துப் பாருங்கள் (1 கொரி.13:4-6).**

**நீடிய சாந்தம் உள்ளது** – எனக்கு எவ்வளவு சாந்தம், அடக்கம், பணிவு உள்ளது?

**தயவுள்ளது** – நான் தயவாக இருக்கிறேனா? இரக்கமுள்ளவனா?

**பொறாமையில்லாதது** – யார் மீதாவது எனக்குப் பொறாமை உண்டா?

**தன்னைப் புகழாது** – என்னையே புகழும் பழக்கமும் நான் புகழப்பட வேண்டும் என்ற விருப்பமும் எனக்கு உண்டா?

**இறுமாப்பாயிராது** – நான் இறுமாப்பாயிருக்கிறேனா? அல்லது தாழ்மையுடன் இருக்கிறேனா?

**அயோக்கியமானதைச் செய்யாது** – என் செயல்களில் தற்போது முரட்டுத்தனம் போன்றவை காணப்படுகின்றனவா?

**தற்பொழிவை நாடாது** – என் வாழ்க்கை சுயநலத்தால் நிரம்பியிருக்கின்றதா?

**சினமடையாது** – சிறுகாரியங்களுக்கும் சினமடையும் வழக்கம் எனக்கு உண்டா? யார் மீதாகிலும் கோபத்தைப் பேணி வைத்திருக்கிறேனா?

**தீங்கு நினையாது** – என் நினைவுகள் எப்படி இருக்கின்றன? குறிப்பாக மற்றவர்களைக் குறித்த நினைவுகள்.

**அநியாயத்தில் சந்தோஷப்படாது** – நம்மை எதிர்ப்பவர்களுக்கு யாரேனும் அநியாயம் செய்தால் நாம் அதற்காக மகிழ்ச்சி அடைகிறோமா? அப்படித்தான் வேண்டும் என்று கூறுகிறோமா?

**சத்தியத்தில் சந்தோஷப்படும்** – நம்முடைய மகிழ்ச்சி எதில் இருக்கிறது?

**சகலத்தையும் தாங்கும்** – நான் அவ்வாறு இருக்கிறேனா?

**சகலத்தையும் விசுவாசிக்கும்** – வேதத்தில் உள்ள அனைத்தையும் விசுவாசிக்கிறேனா?

**சகலத்தையும் நம்பும்** – என் நம்பிக்கை எதில் உள்ளது?

**சகலத்தையும் சகிக்கும்** – என்னுடைய சகிப்புத் தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது.

நம்முடைய குறைபாடுகளை மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கண்டறிந்து அறிக்கை செய்வோமாக.

இனி இப்பண்புகள் நம்மில் காணப்படுவதற்கு, நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து, அனுதின வாழ்வில் செயல்படுத்துங்கள்.

பாராட்டுகிறேன், நன்றி, உங்களுக்கு உதவி செய்யலாமா?, வருந்துகிறேன், மன்னியுங்கள் என்பவை போன்ற சொற்கள் என் வாயில் அடிக்கடி காணப்படுவதாக.

(பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி வரங்கள், கனி என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது).

# உங்கள் வீட்டு டி.வி. தேவனுக்குப் பிரியமானதா? சோதித்துப் பாருங்கள்!

1. நீங்கள் குடும்ப அங்கத்தினருடன் நேரம் செலவழிப்பதைக் காட்டிலும் டி.வி. முன்னால் அதிக நேரம் செலவழிக்கிறீர்களா?
2. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு நாளில் ஒரு மணி நேரத்திற்கு மேல் டி.வி. பார்க்கிறீர்களா?
3. உங்கள் வீட்டில் எப்பொழுது டி.வி. பார்க்க வேண்டும் என்ற விதிமுறைகள் உண்டா? (உதாரணமாக : பள்ளி செல்லும் முன்னால் பார்க்கக் கூடாது. இரவு 10 மணிக்கு மேல் கூடாது. வீட்டுப் பாடம் முடிக்கும் முன் கூடாது).
4. உங்கள் குடும்பத்தோடு உள்ள ஐக்கிய நேரம் பறிபோகும் வகையில், சாப்பிடும் நேரங்களில் டி.வி. பார்க்கிறீர்களா?
5. உங்கள் பிள்ளைகள் எந்நெந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்று கவனிக்கிறீர்களா?
6. உங்களைத் தொந்தரவு செய்வதைத் தவிர்ப்பதற்கு உங்கள் பிள்ளைகள் டி.வி.யில் எதையாவது பார்க்கட்டும் என்று அனுமதிக்கிறீர்களா?
7. உங்கள் பிள்ளைகளோடு டி.வி. நிகழ்ச்சிகளைக் கலந்து ஆலோசிக்கிறீர்களா?
8. உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போது அவர்களோடு தரமான நேரம் செலவழிப்பதற்குப் பதிலாக அவர்களோடு சேர்ந்து டி.வி. பார்க்கிறீர்களா?
9. சண்டை, ஆபாசம், அசுத்தம் மற்றும் நல்லொழுக்கமற்ற காரியங்களைப் பார்க்கிறீர்களா?
10. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அடிமைகளாயிருக்கிறீர்களா?

## மதிப்பீடு

- ஒவ்வொரு கேள்விக்கும் ஆம் அல்லது இல்லை என்று உண்மையாகப் பதில் கூறுங்கள்.
- 3,5,7,கேள்விகள் தவிர மற்ற எல்லா கேள்விக்கும் இல்லை என்று பதில் அளித்திருப்பீர்களாகில் உங்கள் பழக்கம் ஆரோக்கியமானது. அப்படி இல்லையென்றால், நீங்கள் தேவ சமூகத்தில் உட்கார்ந்து மன்னிப்பு கேட்டு உங்கள் பழக்கத்தை மாற்ற வேண்டும். இல்லயேல், பிசாசுக்கு இடம் கொடுக்கிறவர்களாயிருப்பீர்கள் (எபே. 4:27).

## அனுதின கிறிஸ்தவன்

தேவன், நாம் அவரை அனுதினமும் பின்பற்றி அவருடைய வழிகளில் வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நாம் கீழ்க்கண்ட காரியங்களை அனுதினமும் செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு போதிக்கிறது.

1. அனுதின ஜெபம் (அப்போஸ்தலர் 2:42; சங்கீதம் 86:3)
2. அனுதின வேத தியானம் (அப்போஸ்தலர் 2:47; 17:11; சங்கீதம் 1:1-2)
3. அனுதினத் துதி (சங்கீதம் 72:15)
4. அனுதினமும் சுவிசேஷம் அறிவித்தல் (அப்போஸ்தலர் 2:47, 5:42)
5. அனுதினமும் பரிசுத்தம், சுத்திகரிப்பு (எண்.29:6; ரோமர் 12:1)
6. அனுதினமும் சிலுவை சுமத்தல் (லூக்கா 9:23)
7. அனுதினமும் புத்தி சொல்லுதல் (எபிரெயர் 3:13)

## Burn! Learn! Earn! Turn!

There is a call to all the believers to burn, learn, earn and turn!

**BURN!** John the Baptist was a **burning** and shining light(John 5:35). If there is anything we need today, it is revival **fire**. Fire to stir our cold spiritual life! Fire to drive us on to our knees! Untold millions today are dying untold because we lack the fire of the Holy Ghost. Let us be freshly baptized with fire to burn out for God.

**LEARN!** The Bible says, “Jesus increased in **wisdom**” (Luke 2:52). Timothy was a young man. Apostle Paul's counsel to him was, “**Study** to show thyself approved unto God” (2 Tim. 2:15). Set apart a time every day for the constructive study of God's Word. Let the Bible be your delight. Read also sound spiritual books especially the biographies of pioneer missionaries and great men of God.

**EARN!** Earning, like learning, needs high spiritual motivation. Earn all you can and give all you can! The Bible condemns earning for keeping. Let us EARN TO GIVE. Jesus said, “It is more blessed to give than to receive” (Acts 20:35). Give according to your income lest God makes your income according to your giving! Not how much of my money will I give to God, but how much of God's money will I keep for myself ?

**TURN!** Burn. Learn. Earn. All to TURN men and women to Christ! We are called to turn the hearts of people to be tuned to God. We should be found constantly at it. Today's world is yet to call us as, “these that have **turned** the world upside down!”(Acts 17:6).

**Source: Youth Revival Letters**

---

## போட்டி எண்–78 சரியான விடைகள்

1. நல்லது; 2.நலம்; 3.நலம்;4.நலம்; 5.நலம் 6.நலம்; 7.நல்லது; 8.நலம்; 9.நலம்; 10.நல்லது

**உன்னதப்பட்டு**

1.வெள்ளாட்டு மந்தை; 2.மாதளம் பழம்; 3.மதுரம்; 4.ஆட்டு மந்தை;5.கோதுமை அம்பாரம்; 6.கர்மேல் மலை; 7.கோபுரம்; 8.தங்கமயம்; 9.நல்ல திராட்சை ரசம்; 10.மரணம்.

## போட்டி எண் : 78 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : ராதாமணி; எஸ்தர் கலா; பொம்மி; S.முத்துலெட்சுமி; டோரா; பியூலா; ஜெபமேரி; K.மஞ்சு; மரகதம்; மகேஸ்வரி; E.கலா; T.கலா; சாந்தி; G.முத்துலெட்சுமி; சுபா; புஷ்பவள்ளி; கந்தையா; சுமதி; கிரிஜா; கோகிலா; மாரிமுத்து; கனகவல்லி; சித்ராபிளஸ்சி; குளோரி; S.ஜெயா; | **ஸ்ரீவில்லிபுத்தூர்** : நித்தியா; மெசி; அபிநயா; சித்ரகலா; அனிதா; நாச்சியார்; குளோரி; கிறிஸ்டிபிரியா; ஜெஸிராணி; இவாஞ்சலின் ஏனோஸ்; ஜெசிக்கா ஏனோஸ்; ஆபிரகாம்; ஞானம்; தேவபிரியா; பாஞ்சாலி; காபிரியேல்; அன்பு தெரசாஸ்மைலின்; செல்வி; கிரேஸி; ரேச்சல் இவாஞ்சலின்; மரியாள்; சத்யா;|**திருச்சி** : அனுசுயா; வேணி; கிறிஸ்டி; கிறிஸ்டிமகாலெட்சுமி; ஹெலன்; சாந்தி; தனபாக்யவதி; தங்கலதா; மேரிசுஜாதா; வசந்தி;|**எடப்பாடி**:ஜோசப்மேரி; பாக்கியம்; ரெஜினா; தீபனா; பிரியா; மாலதி; விஜயா; ரூத்; லீதியாள்; மெர்சி;|**மதுராந்தகம்** : ராணி; ஹரிணிமெர்லின்; பிரின்ஸி; மெர்லின் பிரீடா; ஜெனிட்டா; புவனேஸ்வரி; நேசம்; வேதமணி; ஜோஸ்பின்; சுனிதா; மெர்ஸி; சுந்தரி;| **இறச்சகுளம்** : கலா; சோபா; ஜெஸ்லின்; பேபி; காயத்ரி; ராதிகா; அமலாவேணி; நளினாஷாலினி; கவிதாஸ்ரீ; கனகமணி; சதா; சாலினி; தர்ஷினி;| **அச்சிறுப்பாக்கம்** : தமிழ்ச்செல்வி; இலக்கியா; மெர்லின் கிப்டா; ஏஞ்சலின் பிரீடா; செல்வகுமாரி; எஸ்தர் தமிழ்; சுதா; ஜெனிதா கிறிஸ்டி; டாரத்தி; ரேஷ்மா; சித்ரா; வினிஷா; |**ஆலங்குளம் (V)** : ஸ்டெல்லா; சாலினி; ரெஜினாசாரு; லதா; காயத்ரி; கிருஷ்ணம்மாள்; பிருந்தா; கிருபா; ஜாயல் பெர்சிஸ்; ஜெயபாரதி;| **நெல்வாய்** : வெஸ்லி; தருண்குமார்; அமலா; ஜூலியட் மார்சிரட்; கலையரசி; ஆல்வின் பாண்டியன்; கிப்டி அருணா; மெர்சி பிலிப்; |**திருநின்றவூர்** : சுமதி; மலர்விழி; வின்சி; லாலி; மார்த்தாள்; ஜென்சி; அனுபிரியா; எழிலரசி;|**கடையநல்லூர்** : ஸ்டெல்லா; தனம்; ஆஷாதேவி; ஜெபசீதாலெட்சுமி; ராணி; வினோலியா; தங்கராஜ்; நளினி; அகிலா; |**கிருஷ்ணகிரி** : ஜடா; ராகுல்; ஆனிமெர்சி; ஜெமிமா; இளவரசன்; முரளிதரன்; தனம்; |**நாசரேத்**: சுமித்ரா; தேவகிருபைகலா; எஸ்தர்; பரிபூரணம்; மெர்சி; மேரி; தாசன் மோசஸ்;| **கிச்சிப்பாளையம்** : வினிதா; கிறிஸ்டல் ஜான்; சாரோன் ஜெயரூபி; சாந்திகலா; ராணி; தீபா;| **மடத்துக்குளம்** : யாஷீலா; கிரேஸ்மேரி; கிதியோன்; ஜீன் மெரிலின் கிருபா; பிரீத்தி; சேர்மகனி; |**தூத்துக்குடி** : சகாயமேரி; சுதா ஜெயசீலி; சேவியர் அந்தோணியம்மாள்; சில்வ் ஸ்டார்; பூரூசிமா; சத்யா; **பெருங்குளம்** : லீதியாள்; பியூலா; ஜெபா; எப்சிபா; பவித்ரா; ஜெயலின்சிங்;| **தேனி** : மீனா; கிறிஸ்டினா ரேகா; கிருபா; ரவிபிரபா; திரவியச்செல்வி; தனம்; அன்புக்கனி; ராகேல்; | **மம்சாபுரம்** :பியூலா; ஹெப்சிபா; மீரா மெராக்கலின்; சத்யபிரியா; யோகராணி; | **பரமத்திவேலூர்**:பாமா; சௌமியா; சண்முகப்பிரியா; சுமதி; கவிப்பிரியா;| **வில்லியனூர்**:மைதிலி; புரோனிக்கா; செல்லப்பன்; ஷீபா; கீதாராணி; சுபாஷினி; |**ஆண்டிபட்டி** : புளோரியா; பிரீசன்மெர்சி; மேரி; தேவபாக்கியம்; **திருநெல்வேலி** : சில்ரியா; பிரேமாரூத்; ராஜ்குமார்; மெரிஸ் ஆலிஸ்; தர்மராஜ்;| **அந்தமான்**: விஜய்; ஜெயந்தி; தங்கமணி; ஜேக்லின்; கெத்சியாள்; ஸ்டெல்லாமேரி;|**ஆறுமுகநேரி** : சுகிர்தா; கஸ்தூரி; வெண்ணிலா எஸ்தர்; மீனா;| **மூலைக்கரைப்பட்டி**:மல்லிகா; வசந்தி;ரூபன் செல்லத்துரை; தேவி;| **திருக்கச்சூர்** : தனலட்சுமி; ஜெயந்தி; கீதா; கிரேஸி ரேகா; |**மதுரை** : சரோஜினி; லூயிஸ்; மேரி; ரூபி ஜெகதாம்பாள்;|**வால்பாறை**:வனராஜ்மொழி;அன்புக்கனி; வளர்மதி;ஜெயந்தி;| **திசையன்விளை** : ஜெயசீலி; ஜாய்பெல்; ராணி; |**கொட்டகுளம்** : ஏஞ்சல்ராணி; ரக்ஷனா; ஜான்சிராணி; |**பழனி** : சாந்தி; பிரீத்தி; ரேஷ்மிகா; |**சிட்டலப்பாக்கம்** : தாமரைச்செல்வி; ஜோதி; ரெபெக்காள்;| **கம்பம்:**கலைமதி: புஷ்பலீலா;ஜோதிமணி;|**கோவில்பட்டி**:அகிலாஜாய்; ஹெலன் மெர்சி; வால்டர் சிங்;|**தர்மபுரி**:நீனாபிரித்தா; ரூத்; உதயா கிறிஸ்டினாள்; |**இராமன்புதூர்** : பிரேமா; அன்னம்மாள்; லீதியாள்; |**வடக்கு ஆத்தூர்** : டேவிஷா; மகேஸ்வரி; ரூத் பாக்யவதி; ரெமில்டா; |**ஆலங்குளம் TNPC**:பிளாரன்ஸ்; தங்கம்; உமாரோஸ்லின்; |**வத்ராப்**: ஜெபராணி; கிறிஸ்டி; அருள்செல்வி; |**பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; லீலா; ராம் ரெபெக்காள்;| **முத்தையாபுரம்** : ஜீவிதா; மங்களம்; காபிரியேல் அந்தோணி; | **ஓசூர்**: ஜெமிந்தா; அன்பழகி; ரித்திஹா |**வெள்ளாளன்விளை** : ஞானமணி எப்சிபா; அன்பு துரைராஜ்; சாராள்; |**வந்தவாசி**: தயா; விஜயா; சுமதி;| **புளியங்குடி** : ஞானமணி; ஞான்சன் எபினேஷ்; செல்வராணி; சுந்தரி;

## போட்டி எண் : 78 (சரியான விடை எழுதியவர்கள்)....

|**சென்னை**:பூஜா; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; |**நாகர்கோவில்** : ரதிகுமாரி; கிறிஸ்டி;| **கொட்டிவாக்கம்** : எப்சிபா; பொனிட்டா; |**ஹஸ்டம்பட்டி** : பிபிசிபா ஆல்யன்; எஸ்தர்; |**மல்லசமுத்திரம்** :பால்ராஜ்; பூர்ணிமா; |**புஞ்சைபுளியம்பட்டி** : சாரதா; கஸ்தூரி; சங்கீதா; |**பெரியகுளம்** : கிறிஸ்டி தெபோராள்; மனோ காசிராஜ்;| **சாத்தூர்** : சங்கீதா; ஸ்டீபன் செல்வராஜ்; |**காமராஜபுரம்** : சிந்து; ரவித்தா;| **காளையார்கோவில்** : சத்யா; அருளானந்தம்; |**ஆசாரிபள்ளம்** : சியமலா; ஏஞ்சல்குமார்; |**காரைக்கால்** : ராஜாமணி; உமா; |**குற்றாலம்**: ரூத்; வேளாங்கனி; |**புதுக்கோட்டை** : லலிதா; ஜெனிபர்; |**ஒட்டப்பிடாரம்** : பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; |**சத்தியமங்கலம்** : மேரி; சத்தியசெல்வி; |**திருப்பத்தூர்** : அருள்ஜெர்லின்மேரி; ரீட்டா; |**பள்ளிக்கரணை** : சார்லட் லாசரஸ்; ஜெயலஷ்மி; **நெய்வேலி** : ஜாக்குலின் மேரி; கண்ணன்; மத்தேயு அலெக்ஸ்;| **விருபாட்சிபுரம்** : ஜோயா; ஜாஸ்மின்; |**ராதாபுரம்** : அருள்செல்வி; மல்லிகா;| **செண்பகராமன் புதூர்** : வனிதா; சினேகா லதா; |**அரும்பாக்கம்** : மேரி; ஜெனிட்டா தங்கராணி; |**திருக்கோயிலூர்** : டாரிஸ்; கிறிஸ்டெல்லா;| **விருத்தாசலம்** : பிரின்ஸி; சுகிர்தா; |**தேனி**: லீலாவதி ;| **ஆழ்வார்குறிச்சி** : ஹரிலீலா; தெபோராள்; |**பேயன்விளை** : பிரேமா; ஜாய்ஸ் மேரி; |**களக்காடு**: விமலாபாய்; |**கோடம்பாக்கம்** : அருள்மேரி; |**புதுச்சேரி** : ரஞ்சிதம்; |**V.K.புரம்**: நிர்மலா; |**வெள்ளோடு** : விசுவாசமேரி; |**திருவண்ணாமலை**:வேதமணி;|**பெருமாநல்லூர்** : செல்வின்; |**பழையகாயல்** : எலிசபெத்; |**தஞ்சாவூர்** : ஜமுனா; **உடுமலை** : ஜோன்ஸி; வசந்தி; |**கன்னியாகுமரி** : அனுபிரியா; |**நரிக்குடி** : ரெபெக்காமேரி; பியூலா; |**திருமங்கலம்** : இம்மானுவேல்; |**உத்தமபாளையம்** : சுசித்ரா; |**திருவள்ளூர்** : ஏஞ்சல்; |**கவுந்தப்பாடி** : கீர்த்தனா; |**புதுப்பாக்கம்** :ஹெலன்மேரி;| **T.N.பாளையம்** : சுஜா; சந்தியா; |**கீழ சிந்தாமணி** : வனத்துமேரி;| **நாச்சிகுறிச்சி** : சுகந்தி; |**காஞ்சிபுரம்**:பாமா;|**சுரண்டை**: வசந்தி; |**பரமன்குறிச்சி**:செல்வி; |**மாதவாக்கம்** : பியூலா; |**பழங்காநத்தம்** : ஞானம்; |**தென்னூர்** : ஜெயசித்ரா; |**பார்த்தநாயக்கன்பட்டி** : தாயம்மாள்;|**கடாட்சபுரம்**: ரேவதி; |**கீழ்வேளூர்** :கிரேனாம்பு; |**தஞ்சாவூர்** : சுலோச்சனா; விஜி; |**ஜாகிர்ரெட்டிபட்டி** : சுகந்தி; |**ஏரல்** : அமுதா; |**கூடலூர்பட்டி** : ஜெபகனி; **புதுவை**: குப்பம்மாள்; |**கோவை** : இம்மானுவேல் அருண்குமார்; ஸ்டெல்லா;| **அம்பை** : பத்மாவதி;|**திருக்குறுங்குடி** : ரேணுகா; |**ஆண்டாள்புரம்** : கனகவல்லி; |**டோனாவூர்** : அல்போன்ஸ்; |**திருவைகுண்டம்** : கெத்சியாள்;| **அவிநாசி** : தீபா; |**ஏரவாடி** : செல்வி; மரகதம் ; |**சொனகன்விளை** : பிளஸ்சி பிரின்சிஸ்; |**செய்யூர்** : எட்வர்ட்; |**சாயர்புரம்** : டார்லிங்; |**சேத்துப்பட்டு**; ரெக்ஸி; **திருச்செந்தூர்**:பியூலா; |**P.N.புதூர்**:கிறிஸ்டினா; அபிகாயில்; |**வடசேரி** : கமலாபாய்; |**கொட்டிவாக்கம்** :அமுதவல்லி; |**மேலவேலம்பேட்டை**: விஜயகுமார்;| **ஜாபர்கன்பேட்டை**:சுபா; |**சிக்கக்கல்**: சுரேகா;| **திருக்கோவிலூர்** : லஷ்மிதேவி; |**செவ்வாய்பேட்டை** : சகுந்தலா; |**திண்டிவனம்** : சாராள்; ஜெசிந்தா; |**சொக்கம்புதூர்** : நிர்மலா; |**கவுந்தப்பாடி**:பிரியா; |**சேலையூர்**:பெர்சிஸ்ஜாய்;| **கொங்கத்தான் பாதை**:சந்திரா; **குரோம்பேட்டை** : முத்துராஜ்; |**நம்பியூர்** : சுகந்தி; |**காமராஜபுரம்** : மரகதலீலா;| **வெள்ளக்கல்** : கலா; |**நாங்குநேரி** : ராஜன்; |**மெய்யூர்** : எபிநேசர்; **சின்னாளப்பட்டி** : சலோமி; |**பெங்களூர்** : தேவபிரியா; |**கொளத்தூர்** : நித்யா;| **பொழிச்சலூர்**: ஆனந்தன் வீனா; |**கருமங்கலம்** : குளோரி; |**ஏர்காடு** : டேவிட்; **ராவணசமுத்திரம்** : பியூலா; |**அச்சன்குளம்** : மாதன்சாமுவேல்; |**நாகமலை** : ஹில்டா எலிசபெத்; |**கோணம்**:மரியநேசம்; |**அரசூர்**: ரோஸ்லின்;| **திருப்பத்தூர்** : ரூத்தேவனாய்; |**கொடைக்கானல்** : சோபியா; |**வேலூர்** : ரூபி;| **இடையர்பாளையம்** : மேரி; |**நெய்யூர்** : ஷீலா; |**சாலவாக்கம்** : மாதணி; **குனியமுத்தூர்** : பத்மினி: |**பாவூர்சத்திரம்** : ஜெயந்தி; |**கவுஸ்சிங்போர்டு** :ஹெனிட்டா; |**திருப்பூர்** : ராஜலஷ்மி; |**குத்துக்கல்வலசை** : மினி மிஸ்மா;

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 79

ஏசாயா 1-30 வரை (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. யாருடைய சந்ததி ஒருபோதும் பேர் பெறுவதில்லை?
2. எது வியர்த்தமும் வீணுமாம்?
3. எதினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்?
4. எவைகள், எதினால் அடிக்கப்படும்?
5. யார் கால்களில் சிலம்பு ஒலிக்க திரிகிறார்கள்?
6. எது மாட்டைப் போல் வைக்கோல் தின்னும்?
7. நீங்கள் ----------- நிலைபெறமாட்டீர்கள்
8. எது சத்துவமற்று உலர்ந்து போகும்?
9. என் ஜனங்கள் ----------- சிறைப்பட்டுபோகிறார்கள்?
10. யார் நீதியைக் கற்றுக்கொள்ளான்?
11. எதினால் தேசம் நிறைந்திருக்கிறது?
12. யார் நிர்மூலமாவார்கள்?
13. யார் தலை? யார் வால்?
14. இல்க்கியாவின் குமாரன் யார்?
15. யார் உபதேசம் கற்றுக்கொள்வார்கள்?
16. எது மோவாபின் எல்லையெங்கும் சுற்றும்?
17. யார் பெருமூச்சுவிடுவார்கள்?
18. ஆமோத்சின் குமாரன் யார்?
19. என் போரடிப்பின் ----------- என் களத்தின் -----------
20. யார் திரும்ப எழுந்திரார்கள்?
21. ----------- அற்றுப்போவான் ----------- இல்லாமற்போவான்.
22. யார் மூடரானார்கள்?
23. ----------- உன் படுக்கை ----------- உன் போர்வை
24. ----------- விழுந்தது, விழுந்தது.
25. கோபத்தின் கோலாகிய ----------- ஐயோ.

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.10.2019 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**

**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**

A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809

செல்: 88077 18002

## அம்பத்தூர் மண்டல CA முகாம்





## மதுராந்தகம் மண்டல CA முகாம்









## மதுரை மேற்கு மண்டல CA முகாம்









Registered News Paper Regd. No. 8206 / 62

## தமிழ் பிரதேச நிர்வாகக் குழு தலைவர்கள்




## தமிழ் பிரதேச 71வது வருடாந்திட மாநாடு 2019















BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165